Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி என். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 338
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஐப்பசி 21 ஷஃபான் 4 செவ்வாய்க்கிழமை [7-11-67]

# யாழ்ப்பாணத்தில் ஒரு பைந்து இரத்தம் 120 ரூபா

## உயிருடன் போராடுகையில் நடந்த வியாபாரம்

யாழ்ப்பாணம், செவ்.

ஒரு பைந்து இரத்தத்தின் விலை யாழ்ப்பாணத்தில் 120 ரூபாவாக உயர்ந்துள்ளதாம் இந்த அதிசய விலையேற்றம் நேற்று நண்பகல் இங்கு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் கடுமையான சுகவீனமாகவிருந்த நோயாளி ஒருவர் உயிருடன் போராடிக் கொண்டிருந்தபோதே ஒரு பைந்து இரத்தம் இங்கு 120 ரூபாவிற்கு விற்கப்பட்டதாம்.

சுன்னுகத்தைச் சேர்ந்தவரெனச் சொல்லப்படும் ஒரு நோயாளிக்கு ஆஸ்பத்திரி டாக்டர் ஒருவர் உடனே இரத்தம் தேவையெனத் தெரிவித்ததைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி ஊழியர் எனக் கூறப்படும் இருவரும் வெளி ஆட்கள் இருவரும் சேர்ந்து இந்நடவடிக்கையில் இறங்கி 120 ரூபாவிற்கு இரத்தம் விற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் கோஷ்டிக்கு எதிராக

[5-ம் பக்கம் பார்க்க]

# அரிசி கள்ளக்கடத்தல் பேச்சு அர்த்தமற்றது -பிரதமர் அறிவிப்பு

## "கூடிய விலைகொடுத்து குறைந்தவிலைக்கு விற்பார்களா?"

### பார்லிமெண்டில் பண்டிதர் இரத்தினம்

கொழும்பு, திங்கள்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அரிசி கள்ளத்தனமாகக் கடத்தப்படுகிறது என்பதற்கு ஆதாரமில்லை என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

பங்கீட்டரிசியின் அளவு குறைக்கப்படுவதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டுவந்த அரிசியின் அளவு பங்கீட்டரிசி குறைக்கப்பட்டபின்னர் குறைந்தது. ஆயினும் பங்கீட்டரிசி விநியோகம் தடைப்படவில்லை இதேசமயம் இங்கு வெளி மார்க்கட்டிலும் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை. இங்கிருந்து அரிசி கள்ளத்தனமாகக் கடத்தப்படுகிறதென்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை. அப்படிக் கடத்தல் நடைபெற்ருலும்கூட அதைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்குப் போதிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் கூறினுர்.

கிளிநொச்சி எம்.பி. திரு. கா.பொ. இரத்தினம் பேசுகையில், வடபகுதியிலிருந்து கள்ளத்தனமாக இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படுகிறதென்பது சிலரின் கற்பனைக் குற்றச் சாட்டு என்றும் இந்தியாவில் சுமார் 2 கொத்து அரிசி ஒரு ரூபாய்க்குக் கிடைக்கையில் இங்கிருந்து ஒரு கொத்து ஒரு ரூபாய்க்குமதிகம் கொடுத்து வாங்கி யாராவது கொண்டு போவார்களா என்றும் கேட்டார்.

## அதிகாரிகளை சந்திக்க ஒருதினம்

### பொதுமககளுக்காக ஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்.

போயா தினங்களுக்கு அடுத்த நாளில் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் கடமையாற்றும் எந்த அதிகாரியையும், பொதுமக்கள் நேரடியாகச் சந்தித்து தமது பிரச்னைகள், குறைகள் பற்றித் தெரிவித்துக் கொள்ளலாம். நேற்று யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக்கூட்டமொன்றைத் தொடர்ந்து அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா இத்தகவலைத் தெரிவித்தார்.

பொதுமக்கள் தங்கள் பிரச்னைகளை இங்குள்ள அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் தெரிவிக்க வசதியளிக்குமுகமாகவே போயா தினத்துக்கு அடுத்த தினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு போயா தினங்களுக்கு அடுத்த தினங்களிலும் இங்கு கடமையாற்றும் எந்த அரசாங்க ஊழியருக்கும் லீவு வழங்கப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[ந. நி]

## யாழ்ப்பாண சினிமா சங்கத்துக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வே. அபயசேகராவினுல் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம்சினிமா சங்கத்திற்கு இலங்கையிலுள்ள அமெரிக்கத் தகவல் இலாகா டைரக்டர் திரு. ரசல் படக்காட்சிக்கு உபயோகிக்கும்கருவியொன்றை அன்பளிப்புச்செய்துள்ளார்.

யாழ். செயலக மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. அபயசேகரா பேசுகையில் கொழும்பு சினிமா சங்கத்தின் அனுசரணையுடன் ஒவ்வொரு மாதமும் யாழ்ப்பாணத்தில் உலகப் பிரசித்திபெற்ற படங்கள் காண்பிக்கப்படுமென்றும் இதனுல் சினிமா ரசிகர்கள் மற்றைய சினிமா நிலையங்களில் பார்க்கமுடியாத படங்களைப் பார்க்க [illegible] குமெனவும் குறிப்பிட்டார்.

## அக்மீ மனைக்கு பிரதமர் விஜயம்

காலி, திங்.

பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இம்மாதம் 9-ம் திகதி காலை அக்மீமனைத் தொகுதிக்கு முதல் [illegible] விஜயம் செய்யவிருக்கிருர்.

## தபால் நிலையத்தில் தந்திப்பத்திரம் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செவ்வாய்

அரசாங்க இலாகாக்களுக்குத் தபால் நிலைய அதிபர்கள் தந்திப்பத்திரங்களை வழங்க மறுக்கிருர்களாம். இது சம்பந்தமாகப் புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் செயலகத்தில் தினமும் சுமார் 50 தந்திப்பத்திரங்கள் தேவைப்படுகின்றபோதிலும் தபாற்கந்தோரில் மிகக்குறைந்த பத்திரங்களையே அவர்கள் வழங்குகிருர்களாம். இதனுல் இங்கு பாவிக்கபோதிய தந்திப்பத்திரம் இல்லாமல் ஊழியர்கள் மிகவும் கஷ்டப்படுவதாக மேலிடத்துக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

தந்திப்பத்திரம் தேவையெனத்தபால் நிலைய அதிகாரிகளைச் செயலகஊழியர்கள் கேட்கும்போது தந்திப்பத்திரம் தங்களிடம் இல்லையென இவர்கள் கையை விரிக்கிருர்களாம். இதனுல் போதிய தந்திப்பத்திரத்தை தமக்கு அனுப்பிவைக்குமாறு செயலகஉயர்தர அதிகாரியொருவர் தபால்மா அதிகாரியை வேண்டியுள்ளதாகவும்தெரிகின்றது

(ந. நி)

## பென்ஷன்காரருக்கு ரயில் வாரண்டுகள்

கொழும்பு, திங்கள்

அரசாங்க பென்ஷன்காரர்களுக்கு ரயில்வே வாரண்டுகள் வழங்கப்படும் என்ற செய்தியில் உண்மையுண்டா என்று நேற்று பிரதிநிதிகள் சபையில் தொடாவ எம்.பி. கேள்வியென்றைக் கேட்டார்.

உதவி நிதிஅமைச்சர் திரு. என். விமலசேன பதிலளிக்கையில், பென்ஷன்காரர்களுக்கு ஒரு சோடி வாரண்டுகளை வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும் இது குறித்து விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

**சோவியத் பொன்விழா மலர்**

இன்றைய 'ஈழநாடு' பத்திரிகையுடன் சோவியத்புரட்சி பொன்விழா மலர் [4 பக்கங்கள்] இணைக்கப்பட்டுள்ளது.

## பால்உணவு பரிசோதனை

கொழும்பு, திங்கள்

பால் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடுபற்றியும் அதில் நடைபெறுவதாகக் கூறப்படும் மோசடிகள் பற்றியும் கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் பால் உணவுகள் யாவும் சரியான முறையில் விநியோகிக்கப்படுகின்றனவா என்பதுபற்றியும் விநியோகிக்கப்படும் பால் உணவு டின்கள் யாவும் சரியானமுறையில் விற்பனை செய்யப்படுகின்றதா என்பதுபற்றியும் பரிசீலனை செய்யநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சிலாபத்துககு திருமலை உதவி

திருக்கோணமலை, திங்கள்

சமீபத்தில் சிலாபத்தில் ஏற்பட்டகடும் சூருவளியாலும் பெருவெள்ளத்தினுலும் இன்னல் உற்ற சிலாபப் பொதுமக்களுக்கு உதவி செய்யும் முகமாக திருக்கோணமலை நகராசபைத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தம் இங்குள்ள பொதுமக்களை தம்மாலான பண உதவியோ அன்றி பொருளுதவியோ புரியுமாறு வேண்டியுள்ளார். கொடுக்கப்படும் நிதியாவும் நகரசபையில் ஏற்கப்பட்டு சிலாபம் பாராளுமன்ற உறுப்பினர்க்கு அனுப்பிவைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு நண்பர்களிடையே தகராறும் கொலையும்

## காரணம் ஒரு கைக்கடிகாரம்

மாத்தறை, திங்கள்
நான்கு அரசாங்க ஊழியர்கள் வாசஞ்செய்த 'சம்மரி' ஒன்றில் ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் பற்றி விசாரணை நடத்த மாத்தறை உதவி பொலிஸ் சுப்பிரிண்டெண்ட் திரு. ஏ. ஈ எம். ஜயசேன அம்பாந்தோட்டைக்கு விரைந்துள்ளார்.

இந்த நான்கு அரசாங்க ஊழியர்களும் நல்ல சினேகிதமாகவே வாழ்ந்துவந்தனர். ஆனால், சில தினங்களுக்கு முன் அவர்களில் ஒருவரான மின்சார போர்மன் சந்திரரத்தினவின் கைக்கடிகாரம் காணமற் போய்விட்டது.

தம்து அறையிலுள்ள சகாக்களே தமது கைக்கடிகாரத்தைக் களவாடியிருக்கவேண்டுமென்ற அர்த்தம் தொனிக்க திரு. சந்திரரத்ன கூறிய வார்த்தை கலேயடுத்து, அந்த நால்வரிடையேயும் பலத்த வாக்குவாதமும், அதைத்தொடர்ந்து குழப்பமும் ஏற்பட்டதாம்.

அதே தினம், கச்சேரிக் கிளார்க் ஒருவரான திரு. லியானகேயும், மற்றுமொருவரான மெண்டிசும், துப்பாக்கிச்சூட்டுக்காயங்களிலிருந்து இரத்தம் வழியக் கிடக்கக் காணப்பட்டார்கள்.

அவர்கள் இருவரும் உடனடியாக மாத்தறை ஆஸ்பத்திரிக்கு விரைந்துசெல்லப்பட்டனர். ஆனால், திரு. லியானகே, தமது துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்குப் பலியானார். திரு. மெண்டிசும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.


**REGAL** JAFFNA
Daily at
4-45 7-00 And
9-45 p. m. Only
Rod Taylor
in
**THE LIQUIDATOR**
Panavsion Color

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ரவிச்சந்திரன்- ஜெயலலிதா
நடித்த
**குமரிப்பெண்**

**மனோகரா**
யாழ்ப்பாணம்
Dally at 2-30, 6-30, &
9-45 Pm
Pre Poya & Poya 10-30 am
தேவானந், சைராபானு,
சசிகலா நடித்த
**பியார் மொகபாட்**
**PYAR MOHABBAT**
ஹிந்தி (ஈஸ்ட்மன் கலர்)

**இப்பொழுது நடைபெறுகிறது**
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 2-30, மாலை 6-20, இரவு 9-30 மணிக்கு
**பிளாஸா** [வெள்ளவத்தை] **கெப்பிட்டல்** [கொழும்பு]
**மைலன்** [கொட்டாஞ்சேனை]
**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணா** [திருமலை]
மற்றும் நாலு திரைகளில்
**எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்**
முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!
கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.
மற்றும்



ஜெயலலிதா, ஜெய்ந்தி
நம்பியார், அசோகன்,
நாகேஷ், ஸ்ரீராம்,
மனோரமா,
பி. கே. சரஸ்வதி
நடித்த
தேவர் பிலிம்ஸ்
# முகராசி
டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்
இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

**6-வது வாரம்**
**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **லக்ஷ்மி** [கரவெட்டி]
ஜெய்சங்கர் — ஜமுனா — நாகேஷ் — பேபி பத்மினி
நடித்த
ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற
**குழந்தையும் தெய்வமும்**


## கூட்டுறவு மகாநாடு

மானிப்பாய், ஞாயிறு
சர்வதேச கூட்டுறவு இணைப்பு ஸ்தாபனத்தின்பிரதேச அதிகாரியான கலாநிதி எஸ். கே. சக்ஸேனா, யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். இம்மாதம் 23, 24 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற வருக்கும் வட பகுதி ஐக்கியமேற்பார்வைச் சபையின் வருடாந்தக்கூட்டுறவு மகாநாட்டில் பிரதம விருந்தினராக இவர் கலந்து கொள்வார். யாழ். நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டில் புதிய கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. பி, ஏ. சில்வா, அகில இலங்கை கூட்டுறவு சம்மேளனத் தலைவர் திரு. எட்மன்ட் விஜயசூரியா ஆகியோரும் கலந்துகொள்வர்.

## நேரடித்தொலைபேசி

புலோலி, திங்கள்
நாகர் கோயில் உபதபாற் கந்தோருக்கு நேரடித் தொலைபேசி இல்லாதகுறை இன்னும் ஒரு வாரத்தில் நீங்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

நேரடி தொலைபேசிக்கு வேண்டிய பூர்வாங்கவேலைகள் இம்மாதம் 1-ம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றன. அடுத்தவாரம் அளவில் நேரடித் தொலைபேசி சேவை ஆரம்பித்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வயல்களில்மாணவர்

முல்லைத்தீவு, திங்கள்
உணவு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவ மாணவிகள் சென்ற இரு தினங்களாக வயல்களுக்குச் சென்று சிரமதான முறையில் களைகளைப் பிடுங்கி உதவுகின்றனர். மேற்படி வித்தியாலய அதிபர் திரு. என். இராஜநாயகம் மாணவ மாணவிகளை உற்சாகமூட்டும் பொருட்டு இதர ஆசிரியர்களுடன் சென்று களை பிடுங்குதலைக் கண்காணித்து வருகிறார்.

## இடமாற்றம்

முல்லைத்தீவு, திங்கள்
முல்லைத்தீவு கலால் பரிசோதகர் திரு. எம். என். இஸ்மாயில் எதிர்வரும் ஜனவரி முதல் புத்தளத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவுப்பட்டின சபையின் காரியதரிசியாகக் கடமையாற்றும் திரு. எம். காங்கேசு ஜனவரி முதல்கல்பிட்டியாப் பட்டினசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## சிரியா துறைமுகத்தில் ரஷ்ய கப்பல்கள்

டமாஸ்கஸ், நவ. 5
சிரியாத் துறைமுகத்துக்குச் சோவியத் கப்பல்கள் வந்து சேர்ந்துள்ளன. இவற்றின் எண்ணிக்கை எவ்வளவு என்று அறிவிக்கப்படவில்லை.

கடந்த ஜூன் மாதம், அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையேநடைபெற்ற போரைத் தொடர்ந்து, சிரியாவுக்கு சோவியத் கப்பல்கள் வந்துள்ளது இதுவே முதற் தடவையாகும்.

இக்கப்பல்கள், சிரியாவில் சில நாட்கள் தங்கியிருக்கும்.

சிரியா உதவிப் பிரதமர் மாஸ்கோவில் ரஷ்ய புரட்சி தினத்தின் 30-வது ஆண்டு விழாவில் கலந்துகொண்டிருக்கும் நேரத்தில், இக்கப்பல்களும் சிரியாவுக்கு விஜயம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.


# வரி விளம்பரம்

### தேவை

அச்சுக்கோர்ப்பவர்கள்
மூன்று வருட அனுபவத்துடனுள்ள அச்சுக்கோர்ப்பவர்கள் தேவை. பத்திரிகையில் வேலைசெய்த அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்றபடிசம்பளம் வழங்கப்படும். தெரிவுக்கு முன்னர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். விபரங்களுக்கு விளம்பர இல.2111,மே பா 'ஈழநாடு' என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2111

சாரதி
ட்ராக்டர், புல்டோசர் சாரதிகள் தேவை. விண்ணப்பிக்கவும். ஜி. ஜனார்த்தனன், 135, மீதோட்ட முல்லை ரோட், வெல்லம்பிட்டியா. 2109

மெக்கானிக்
டீசல் ட்ராக்டர்களுக்கும் புல்டோசர்களுக்கும் மெக்கானிக்மார் தேவை. ஜி. ஜனார்த்தனன், 135, மீதோட்டமுல்லை ரோட், வெல்லம்பிட்டியா. 2110

காஷியர்...
ரொக்கப்பிணை கட்டக்கூடிய காஷியரும், விற்பனையாளரும் தேவை. ஆண்-பெண் இருபாலரும் நேரில் விண்ணப்பிக்கவும். விஜயகம் இன்டஸ்றீஸ், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 2103

### விற்பனைக்கு

மேசைகள்
வகுப்பொன்றுக்குத் தேவையான 22 மேசைகள் [பாவித்தவை] விற்பனைக்குள்ளன. நேரில் வருக. 71/10 A, அம்மன்கோவில் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். 2106

### வாடகைக்கு

வீடு
வியாபாரிமூலை மெயின் வீதியில் கடற்கரை காட்லி, மெதடிஸ்த கல்லூரிகள், கோடுகளுக்கு அண்மையில் லையிற், குழாய்நீர் வசதிகளடங்கிய 4 அறை வீடு வாடகைக்குண்டு. விபரங்களுக்கு:- 146 A, கோவில் வீதி, நல்லூர். 2108


## ஆபத்தான தென்னைமரங்களுக்கு 3பிள்ளைகள் பலி

சிலாபம், திங்கள்
தென்னை மரங்களிலிருந்து கிளைகளும், தேங்காய்களும் விழுந்ததன் விளைவாக, கடந்த மூன்று நாட்களில், ஏழு பிள்ளைகள் சிலாபம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

தலையில் விழுந்து காயமேற்பட்ட மூன்று பிள்ளைகள் மரணமாகினர்.

அண்மையில் இப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இம் மரங்கள், வேரோடு சாயாவிட்டாலும், இப்போது மெதுவாகச் செத்து வருவதால், இவை உயிருக்கு ஆபத்தாக விளங்குகின்றன.

## கப்பல் தீப்பிடித்தது

ரங்கூன், நவ. 6
இலங்கைக்கு 9,000 தொன் அரிசி கொண்டு செல்லும் கிரேக்கக் கப்பலில் கடந்த வெள்ளியன்று கோக்கொஸ் தீவுக்கருகில் தீப்பற்றிக்கொண்டது.

கப்பலின் என்ஜின் அறையில் ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் கப்பலில் தீப்பற்றியது.

இப்போது தீ அணைக்கப்பட்டுள்ளது. கப்பலில் இருந்த 30 பேரில் ஒருவருக்கும் எவ்வித சேதமுமில்லை.

## நூல் வெளியிடப்படும்

பண்டத்தரிப்பு, திங்கள்
எதிர்வரும் கிறிஸ்மஸ் தினத்தையொட்டி யாழ். திருமறை எழுத்தாளர் சழகம், கழகத்தின் சார்பில் நூல் ஒன்றை வெளிட முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. கிறிஸ்மஸ்தினத்தன்று மேற்படி நூல் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பட்டாபிராமன் காலமானர்

சென்னை, நவ. 6
இந்திய காங்கிரசின் தமிழ் நாட்டுக் கிளையின் முன்னாள் காரியதரிசி ஒருவரான திரு. பட்டாபிராமன் இங்கு நேற்றுக் காலமானார். அன்னாருக்கு வயது 48.


**பவரின்**
காய்கறிப் போரை



ஏ. பவர்
அன் கம்பனி லிமிட்
கொழும்பு

யாழ்ப்பாணம்
ராஜா தியேட்டரின்
அருகாமையிலுள்ள
ஒழுங்கையில்
சில தினங்களாக
மூடப்பட்டிருந்த
**மில்றி கபே**
7—11—67-ல்
திறக்கப்படும்.
**பி. அழகர்சாமி**
(உரிமையாளர்) 31 6




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி மாஸ்கோவுக்கு பயணமானுர்

## இந்திய-ரஷ்ய நட்புறவுபற்றி வலியுறுத்தல்

புதுடில்லி, நவ. 6

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி நேற்று நள்ளிரவு மாஸ்கோ புறப்பட்டுச் சென்ருர். மாஸ்கோவில் நடைபெறும் 50-வது புரட்சிதின விழாவில் கலந்து கொள்வதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.





மாஸ்கோவுக்குப் புறப்பட்டுச் செல்ல முன்னர், பாலம் விமான நிலையத்தில் பேசுகையில், தாம் 50-வது புரட்சி விழாவில் பங்குபற்ற மட்டுமே செல்வதாகவும், பேச்சு வார்த்தைகளில் ஈடுபடப் போவதில்லை என்றும் அவர் கூறினுர்.

முன்னதாக, நேற்றுப் புதுடில்லியில், ரஷ்ய புரட்சி தினத்தின் 50-வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில், ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்குமிடையே நிலவும் நட்புறவு, உலக சமாதானத்தின் நலனைக் கருதி, தொடர்ந்து வளர வேண்டுமென இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

### கொஸிஜின் செய்தி

இக் கூட்டத்துக்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில், ரஷ்ய புரட்சி விழாக் கொண்டாட்டங்கள் இந்தியாவில் நடைபெறுவது, இரு நாடுகளுக்குமிடையேயான நேச உறவுக்கும் ஓர் எடுத்துக்காட்டு என ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின் தெரிவித்துள்ளார்.

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின் அனுப்பிய செய்தியில், இந்தியாவுக்கு ரஷ்யா அளித்து வரும் உதவிகளுக்காக ரஷ்ய மக்களிடம் இந்திய மக்களின் நன்றியைத் தெரிவித்தார்.

---

தென் அரபியாவில்

# தேசியக் கட்சிகள் மீண்டும் மோதல்

## 59 பேர் கொல்லப்பட்டனர்

ஏடன், நவ. 6

தென்அரபிய சமஷ்டியில், தேசிய விடுதலை முன்னணி, புளொஸி ஆகிய இரண்டு தேசியக்கட்சிகளுக்குமிடையே தொடர்ந்து சண்டைநிகழ்கிறது.

நேற்று மூன்ரும் நாளாக நடைபெற்ற மோதல்களில், 59 பேர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு கட்சிகளின் தலைவர்களும், தேசிய ஒற்றுமைக்கான பேச்சுவார்த்தைகளில், தற்போது கெயிரோவில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள், தமது ஆதரவாளர்களிடம் சண்டையை நிறுத்துமாறுகோரியிருந்தும் சண்டை நின்றதாகத் தெரியவில்லை.

இரு தேசியக் கட்சிகளில் ஒன்ருன தேசிய விடுதலை முன்னணி கெயிரோவில் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ள தனது தலைவர்களிடம், மற்றக் கட்சியான புளொஸியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டாமென்று கேட்டுக்கொண்டுள்ளது. தற்போதைய மோதல்களை புளொஸியே ஆரம்பித்துள்ளதாகத் தேசிய விடுதலை முன்னணியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

---

# வியட்னும் பிரச்னைக்கு இந்தோனேஷிய சமரசம்?

## அமெரிக்கா வேண்டுகோள்

ஜக்கார்த்தா, நவ. 6

வியட்னும் பிரச்னையில் இந்தோனேஷியாவை ஒரு சமரச நாடாக ஈடுபடுமாறு அமெரிக்காகேட்டுள்ளதாக ஜக்கார்த்தாவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது இந்தோனேஷியாவுக்கு விஜயம்செய்துள்ள அமெரிக்க உப ஜனதிபதி திரு. ஹம்ப்ரி, இந்தோனேஷிய ஜனதிபதி ஜெனரல் சுஹார்ட்டோவை நேற்றுச் சந்தித்து, 2 மணி நேரம் உரையாடினுர். அப்போதே, அவர் ஜெனரல் சுஹார்ட்டோவிடம் இந்த வேண்டுகோளைத் தெரிவித்ததாகச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

இந்தோனேஷியாசமரசத்துக்கு முயற்சிப்பதால் ஏதாவது பயன் கிடைக்குமானுல் அவ்விதம் அது பங்காற்றப் பின்வாங்காது என ஜெனரல் சுஹார்ட்டோ கூறியுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

---

# தெற்கு இங்கிலாந்தில் மின்சார ரயில் விபத்து

## 28 பேர் உயிரிழந்தனர்

லண்டன், நவ. 6

இங்கிலாந்தின் தென்கரையில், மின்சார ரயில் ஒன்றின் 10 பெட்டிகளில் 8 பெட்டிகள் தடம் புரண்டு கவிழ்ந்ததன் விளைவாக, 28 பேர் உயிரிழந்துள்ளனர். மற்றும் 70 பேர் காயமுற்றுள்ளனர். அவர்களிலும் அநேகருக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த ரயில் விபத்துக்கான காரணம் என்னவென இதுவரை தெரியவில்லை.

---

# விமானம் விழுந்து இருவர் மரணம்

புதுடில்லி, நவ. 6

மாலதீவிலிருந்து சிங்கப்பூர் சென்று கொண்டிருந்த விமானமொன்று, நேற்று இந்தியக் கரைக்கருகே விழுந்து நொறுங்கியது.

இவ்விமானத்திலிருந்த 11 பேரில், இருவர் உயிரிழந்தனர். மற்றும் 6 பேரைக் காணவில்லை. மீதிப் பேர் உயிர் தப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---



# சீனவை டிட்டோ தாக்கினுர்

மாஸ்கோ, நவ. 6

யூகோஸ்லாவிய ஜனதிபதி டிட்டோ சீனவைக் கடுமையாகத் தாக்கிப் பேசியுள்ளார்.

மாஸ்கோவில் ஆலைத் தொழிலாளர் கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கண்டனம் தெரிவித்தார்.

உலக கம்யூனிஸ இயக்கத்தில் சீன ஒரு நாசகாரச் சக்தியாக விளங்குவதாக டிட்டோ கூறினுர்.

---

# 'ரஷ்ய தலைவர்கள் கம்யூனிசதுரோகிகள்'

## சீன கண்டனம்

பீகிங், நவ. 6

ரஷ்யாவில், அதன் 50வது புரட்சிதின விழாக்கொண்டாட்டங்கள் நடைபெறும் அதே நேரத்தில், சீனவில் சீனப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் ரஷ்யாவை வெகுவாகக் கண்டித்துக் கட்டுரைகள் வரைந்துள்ளன.

நவசீனசெய்தி ஸ்தாபனம் ரஷ்ய தலைவர்களை கம்யூனிஸ்ட் துரோகிகள் என்று வர்ணித்து, அவர்கள் ரஷ்ய நாட்டை ஒரு பிற்போக்குவாத நாடாக மாற்றிவிட்டார்களென்று குற்றஞ்சாட்டியுள்ளது.

உலக ஆதிக்கத்துக்கென ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே ஒரு சதித்திட்டம் இருப்பதாகச் சீன மீண்டும் குற்றஞ்சாட்டியது. இச்சதித்திட்டம் சீனவையே பிரதான இலக்காகக் கொண்டுள்ளதாகவும், இச்சதித்திட்டத்துக்கு உதவியாக ஜப்பான், இந்தோனேஷியாபோன்றநாடுகளும் பயன்படுத்தப்படுவதாகவும் சீன மேலும் தெரிவித்தது.

---

# ஈமன் புதிய ஆட்சி தரும் கொள்கை விளக்கம்

சானு, நவ. 6

ஈமனில், ஜனதிபதி சலாலின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டுப் புதிதாகப் பதவிக்கு வந்துள்ள இராணுவ ஆட்சி, மூன்று பேர் கொண்ட அதிகார சபையொன்றை நிறுவியுள்ளது.

பழைய ஆட்சியின் கொள்கையைப்பின்பற்றி மற்றைய அரபு நாடுகளுடன் விசேஷமாக ஐக்கிய அரபுக் குடியரசுடன் தமது அரசாங்கம் நெருங்கிய நட்புறவை வைத்துக்கொள்ளும் எனப் புதிய பதவியாளர் அறிவித்துள்ளனர்

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை நடுநிலைமையை அனுசரிப்பதாகவும் அவர்கள்தெரிவித்துள்ளனர்.

பாக்தாத்துக்கு ஜனதிபதி சலால் சென்றிருக்கையிலேயே ஈமனில் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. ரஷ்யாவின் 50வது புரட்சிதின விழாவில் கலந்து கொள்ளும் பொருட்டு மாஸ்கோ செல்லும் வழியில் சலாய் பாக்தாத்தில் இறங்கினுர்.

அவர் தமது நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமை காரணமாகத் தமது ரஷ்ய விஜயத்தைப் பின்போட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஐ. அ. கு. கைதி சுட்டுக் கொலை

டெல் அவிவ், நவ. 5

இஸ்ரேலிலுள்ள போர்க் கைதிகள் முகாமொன்றில் ஐக்கிய அரபுக்குடியரசைச் சேர்ந்த கைதி ஒருவர் இராணுவப் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் பொலிசாரின் உத்தரவுகளை ஏற்கச் சில கைதிகள் மறுத்துக் குழப்பம் விளைவித்ததாகவும், இதைத் தொடர்ந்து பொலிசார் சுட்டதாகவும் டெல் அவிவிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் கைதி முகாமுக்கு நேரில் பார்வையிட [illegible]ள்ளார்.

---

## மே. ஆசிய பிரச்னைக்கு தீர்வு

### திரைமறைவில் முயற்சிகள்

நியூயோர்க், நவ. 6

மேற்கு ஆசியப் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாணு மூகமாக, ஐ.நா.வில் திரைமறைவில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன,

நேற்று, ஐ. நா. பந்தோபஸ்துசபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளும், தெரிவுசெய்யப்பட்ட அங்கத்துவ நாடுகளும் மேற்கு ஆசியா பற்றி விவாதித்தன.

பிரிட்டிஷ் பிரதிநிதி, இந்தியப் பிரதிநிதியான திரு. பார்த்தசாரதியுடன் கலந்தாலோசனை நடத்தினுர்.

அமெரிக்கப்பிரதிநிதி திரு [illegible] வெளியுறவு மந்திரி திரு. [illegible]யாவைச் சந்தித்துப் பேசினுர்.

---

சென்னையில்

## ஆங்கிலமொழி மாநாடு

சென்னை, நவ. 6

சென்னையில் கடந்த இரு தினங்களாக நடைபெற்ற ஆங்கிலம் பற்றிய மாநாடு நேற்று முடிவுடைந்தது.

நாட்டில் ஆங்கிலத்தின் தரத்தைத்தொடர்ந்துபாதுகாத்துக்கொள்ளுமாறு சகல ராஜ்ய பல்கலைக்கழகங்களையும், அரசாங்கங்களையும் மாநாடு கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன், ஆங்கிலமே பல்கலைக்கழகங்களில் போதனமொழியாக இருக்க வேண்டுமென்றும் அது கேட்டுள்ளது.

### நெடுஞ்செழியன்

இம்மாநாட்டில் பேசிய தமிழக கல்வி மந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன், தொடர்பு மொழியென்றதத்துக்குப் பொருத்தமான ஒரே மொழி ஆங்கிலமாகத் தானிருக்கிறதென்று குறிப்பிட்டார்.

---

## ஜெயப்பிரகாஷ் நாராயண்

புதுடில்லி, நவ 6

அரசியலில் தாம் மீண்டும் ஈடுபடலாம் என்ற சில பத்திரிகைகளின் செய்திகளைச் சர்வோதயத் தலைவரான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் மறுத்துள்ளார்.

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண், அரசியலில் மீண்டும் குதித்து, சோஷலிசக் கட்சிக்குத் தலைமைவகிக்கலாம் எனச் சில பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருந்தன.

இச் செய்திகளை, நேற்று ஒரு கூட்டத்தில் பேசுகையில், திரு. நாராயண் மறுத்தார். அப்படி நோக்கம் எதுவும் தமக்கு இல்லையென்றும், தமது தற்போதைய துறையிலேயே [சர்வோதய இயக்கம்] தாம் தொடர்ந்து சேவையாற்றப்போவதாகவும் திரு. ஜயப்பிரகாஷ் நாராயண் கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அன்பு இருக்கும் இடத்தில் பிரிவுக்கு இடமில்லை. என்றாலும் ஒரு நாடு தனக்குத் தானே விரோதமாகப் பிரிந்து போகுமானால் அந்த நாடு நிலைநிற்க மாட்டாது.

— சுவாமி விவேகானந்தர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு ஐப்பசிமீ 21உ (7-11-67)

## அரிசிக் கடத்தல்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அரிசி கள்ளத்தனமாகக் கடத்தப்படுகிறதென்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை. இதைப் பிரதமரே பார்லிமெண்டில் தெளிவாகக் கூறியிருக்கிறார். கள்ளக்கடத்தல் என்ற குரலைக் கேட்டதும், ''ஆமாம், அது உண்மைதான்'' என்று கூறாமல் சரியாக ஆராய்ந்து அதற்கு ஆதாரமில்லை என்று பிரதமர் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது.

கள்ளக்கடத்தல் இலங்கையில் மட்டும் நடைபெறும் விஷயமல்ல. உலக நாடுகள் பலவற்றிலும் இது நடைபெறுகிறது. சில நாடுகளில் இது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நாட்டு ஆட்சியாளரின் விவேகமான நடவடிக்கைகளே இதற்குக் காரணம். இங்கும் கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்காக அரசாங்கம் சுங்க இலாகாவுடன் இராணுவம், பொலிஸ் படைகளுக்கு அதிக அதிகாரங்களையும் வழங்கிப் பெருந் தொகையான பணத்தையும் செலவிட்டு வருகிறது.

கள்ளக்கடத்தல் கண்டிப்பாகத் தடுக்கப்பட்டேயாகவேண்டும். இதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பை அரசாங்கம் பெறவேண்டும். பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்கவேண்டியதும் அவசியமாகும். கள்ளக்கடத்தல் பிரச்னை ஒரு கட்சியினுடையதோ ஓர் இனத்தினுடையதோ அல்ல. இது ஒரு தேசியப் பிரச்னை.

துரதிர்ஷ்டவசமாக இங்கு சில அரசியல்வாதிகள் கள்ளக்கடத்தல் என்றதும் ஓர் இனத்தவர் மீதும் ஓர் இடத்தில் வாழும் மக்கள்மீதுமே பழியைச் சுமத்துகின்றனர். இலங்கையின் வடக்குப் பகுதியில்தான் கள்ளக்கடத்தல் நடைபெறுகிறதென்றும், வடபகுதியிலுள்ள அனைவருமே தேச விரோதச் செயல்களில் ஈடுபடுவதாகவும் சில அரசியல்வாதிகளும் தேசியப் பத்திரிகைகள் என்று சொல்லிக்கொள்ளும் சில பத்திரிகைகளும் வீண் பழி சுமத்துகின்றனர். இது நல்லவர்களையும் தீயவழியில் செல்லத் தூண்டுமேயன்றித் தீயவர்களையும் நல்ல வழிகளுக்குச் செல்ல வழி வகுக்காது. கள்ளக்கடத்தல் வடக்கில் மட்டுமல்ல தென்னிலங்கையிலும் பல இடங்களில் நடைபெறுகிறது என்பதற்கு ஆதாரமுண்டு. தென்னிலங்கையிலுள்ள பல பெரிய ''முதலைகள்'' இதற்குப் பின்னணியில் இருக்கிறார்களென்பதையும் நினைவிற்கொள்ள வேண்டும். கள்ளக்கடத்தலைத் தடுப்பதற்குப் பெரிய அளவில் நாட்டின் பல பகுதிகளிலும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

அரிசி இங்கிருந்து கடத்தப்படுகிறது என்பதற்கு ஆதாரமில்லையென்பதை ஆராய்ச்சி செய்துதான் கண்டுபிடிக்கவேண்டும் என்பதல்ல. இலங்கையில் ஒரு கொத்து அரிசி ஒரு ரூபாய் முப்பது சதத்துக்கும் அதிகமாகவே விற்கப்படுகிறது. தமிழ்நாட்டில் ஒருபடி அரிசி அதாவது சுமார் இரண்டு கொத்து அரிசி ஒரு ரூபாய்க்குக் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் சில இடங்களில் மட்டும் இந்த விலை என்று வைத்துக்கொண்டாலும் தென்னிந்தியாவின் இதர இடங்களில் நல்ல முத்துச்சம்பா அரிசிகூட ஒரு படி ஒன்றரை இரண்டு ரூபாய்க்கு அதிகமில்லை. அரிசி அங்கு மலிவாகக் கிடைக்கும்போது இங்கிருந்து கூடிய விலைக்கு அரிசி வாங்கி அங்கு கொண்டுபோய் குறைந்த விலைக்கு யாரும் விற்பார்களா? அப்படியென்ன முத்துச்சம்பாவை விடத் திறமான அரிசியா இங்கு கிடைக்கிறது? ''சொல்லுவார் சொன்னால் கேட்பாருக்கு மதியென்ன'' என்ற பழமொழி தான் இந்த 'அரிசிக் கடத்தல்' பற்றிப் பிரமாதப்படுத்தும் சில அரசியல்வாதிகளையும் சில பத்திரிகைகளையும் பார்க்கும்போது நினைவு வருகிறது.

# ஆங்கிலம் அந்நிய மொழிய[...]
# அது சர்வதேச மொழ[...]

**ஆங்கிலத்தின் அவசியம்பற்றி இந்தியாவில் மட்டுமல்ல இலங்கையிலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. சில தினங்களுக்கு முன் நீர்கொழும்பில் ஒரு வைபவத்தில் பேசிய வண. ஸ்ரீதர்மலோக தேரோகூட குறுகிய தேசியவாதத்தைவிட்டு ஆங்கிலத்தின் அவசியத்தை உணரவேண்டுமென்றார். ஆங்கிலத்துக்காக நீண்டகாலப் போராட்டம் தேவையென்கிறார், ராஜாஜி. ஆங்கிலம்பற்றி இந்திய அறிஞர் ஒருவர் கூறுவதை இங்கு காண்க.**

— பி. கோதண்டராவ் —

எமக்கு சுதந்திரம் கிடைத்த சமயத்தில் இந்தியா முழுவதிலும ஆங்கிலமே மேற்கல்வி போதனமொழியாகவும் நிர்வாக மொழியாகவும் இருந்தது. அதற்கு பதிலாக இந்தியை அந்த ஸ்தானத்துக்குக் கொண்டு வரவேண்டுமென்றயோசனை ஆங்கிலம் அந்நிய மொழி, இந்தி இந்திய மொழிஎன்ற காரணத்தால் உண்டானது.

ஆங்கிலம் அந்நிய மொழிதானா?1954-இல் பம்பாயில் நடந்த ஒரு பிரபலமான வழக்கில் பிரதம நீதிபதி சாக்ளா ஆங்கிலம் ஓர் 'இந்திய' மொழி என்று தமது தீர்ப்பில் கூறினார்.

வேறொரு சந்தர்ப்பத்தில் சாகித்திய அக்கடமி ஆங்கிலத்தை ஓர் 'இந்திய' மொழியாக அங்கீகரித்துள்ளதென்று ஸ்ரீநேருவே கூறியுள்ளார்.

ஆங்கிலம் இந்தியாவிலுள்ள ஆங்கிலோ இந்தியர்கள் உட்பட வேறுஇந்தியர்களின் தாய்மொழியாகவும் விளங்குகிறதென்று மேற்சொன்ன பம்பாய் வழக்கில் ஒப்புக்கொள்ளப் பட்டது. அச்சமயம் பம்பாய் மாகாணத்தில் ஆங்கிலோ இந்தியர் அல்லாத 22,000 இந்தியர்களுக்கு ஆங்கிலமே தாய்மொழி என்று உத்தியோக புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டப்பட்டன.

இந்தியாவின் அரசியல் அமைப்பே ஆங்கிலத்தில்தான் எழுதப்பட்டுள்ளது.

### சரஸ்வதியின் பரிசு

ஆங்கில மொழி சரஸ்வதி தேவியால் இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட பரிசு என்று 1953-இல் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் கூறினார். 1956-இல் டாக்டர்கே.எம். முன்ஷி ஆங்கிலம் இந்தியாவின் வளர்ப்புப்பிள்ளை என்றார். ஆங்கிலம் அந்நியச் சரக்கல்ல, நமக்குச் சொந்தமானதென்று வை. பி. சவான் 1961-இல் கூறினார்.

காங்கிரஸ் அரசாங்கம் ஆங்கிலத்தை எல்லா மாணவர்களுக்கும் கட்டாய பாடமாக்கியுள்ளது. இன்னும் சில வருடங்களில் இந்தியர் எல்லோருக்கும் ஆங்கிலம் பரிச்சயமாகிவிடும்.

இன்றும் ஆங்கிலம்ஒன்றே இந்தியாவின் தேசிய மொழி. மற்றவை எல்லாம் பிராந்திய மொழிகள். உலகிலுள்ள கிட்டத்தட்டஎல்லா நாடுகளிலும் ஆங்கிலம் உத்தியோக மொழியாகவோ, கட்டாயபாடமாகவோ இருந்து வருவதால் அதை ஒரு சர்வதேசமொழி எனலாம்.

மொழி, அறிவு ஆகியவற்றிற்கு அரசியல் பூச்சோ, சாதி, சமய, நிற கட்டுப்பாடுகளோ கிடையாது. மொழியும் அறிவும் ஒரு தனிப்பட்டவர்களின் உடமையல்ல. இவை சர்வதேச சொத்துக்கள். எவர் வேண்டுமானாலும் எம் மொழியைக் கற்றும் அறிவைவிருத்திசெய்து கொள்ளலாம்.

ஆங்கிலம் அந்நிய மொழி என்றால் இந்திபேசாதவர்களுக்கு இந்தி ஓர் அந்நிய மொழி.

### ஆங்கிலம் இன்றியமையாதது

ராஜா ராம் மோஹன் ராய், ராஜா ராஜேந்திர லால், மித்திரா போன்றஇந்தியப் பெரியார், நவீனவிஞ்ஞானம், சட்டம் முதலியவை படிப்பதற்கு ஆங்கிலம் இன்றியமையாததெனக் கருதி அதை வரவேற்றனர். ஆங்கிலத்தை பிரிட்டிஷார் எம்மீது திணிக்கவில்லை. இந்தியரே ஆங்கிலத்தை தங்கள் சொந்த நன்மைக்காகக் கற்றனர்.

மொழி என்பதற்கு மனிதரிடையே கருத்து பரிவர்த்தனை செய்வதற்கு உபயோகப்படும் ஒருகருவி. நன்றாக வளர்ந்து விரிவடைந்த ஒரு மொழியே இதற்கு மிகவும் பொருத்தமானது.

ஆங்கிலம் இந்தி இரண்டையுமே இந்தியா முழுவதிலும்கட்டாயபாடங்களாக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் இந்தியர்கள் ஒருவரோடொருவர்கருத்து தொடர்பு கொள்வதற்கும், பிற உலகுடன் தொடர[...] கொள்வதற்கும் ஆங்கில[...] ஒன்றே போதுமானது. இ[...]தியால் இத்தேவையை[...] பூர்த்தி செய்ய முடியாது.

### சிறந்த பரிகாரம்

மொழிப்பிரச்னைக்கு சிறந்[...] பரிகாரம் ஒன்றுதான். க[...]வித்திட்டத்தில் ஆங்கில[...]தைக் கட்டாயபாடமாக்[...]வதென்று தீர்மானிக்கப்ப[...]டிருப்பதால் அதையே எ[...]றென்றும் மேற்கல்வி போ[...]மொழியாகவும் நிர்வா[...] மொழியாகவும்வைத்திருக்[...] வேண்டும். இலக்கியம், க[...] முதலியவற்றை வளர்ப்[...]தற்கு தாய்மொழிகளை வி[...]த்தி செய்யலாம்.

(இந்தியன் எக்ஸ்பிரஸ்)

## அமெரிக்காவில் இந்து மதம் பரவுகிறது

வாஷிங்டன், நவ 6

அமெரிக்காவில் குறிப்பாக நியூயோர்க்கில் இந்து பதம் வளர்ந்தோங்கி வருவதாக ''நியூயோர்க் டைம்ஸ்'' எழுதியுள்ளது.

நியூயோர்க் நகரில் மட்டும் பத்து இந்து மத ஸ்தாபனங்கள் இயங்குகின்றன. அந்த நகர்ப்புற எல்லையில் மேலும் இருபது ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இவைகளில் ஏதாவது ஒன்றுக்குச் சென்று பார்த்தால் 125 அமெரிக்கருக்குக் குறையாமல் அங்கு நடக்கும் சமஸ்கிருதப் பிரார்த்தனையைக் கேட்டுகொண்டு மெய் மறந்திருப்பதைக் காணலாமென்று அந்தப் பத்திரிகை கூறுகிறது.

இதுபோன்று அமெரிக்காவிலும், கனடாவிலும் நூறுக்கு மேற்பட்ட இந்து தர்மஸ்தாபனங்கள் இயங்குகின்றன. அவற்றில் ஏராளமான அமெரிக்க மாணவர்களும் பேராசிரியர்களும் இந்திய விவகாரங்கள், யோகம் சித்தார் போன்ற இசைகளில் விசேஷ ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

தொழிலதிபர்கள், வக்கீல்கள், டாக்டர்கள், பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் போன்ற நூற்றுக்கணக்கான நியூயோர்க் வாசிகள் இந்து மதத்தைத்தழுவத் தொடங்கிவிட்டார்கள் என்றும் ''நியூயோர்க் டைம்ஸ்'' கூறுகிறது.

### இன்றைய பலன்

7-11-67

செவ்வாய்க்கிழமை

ஐப்பசி மாதம் 21-ந் திகதி

நட்சத்திரம்- பூராடம் பி. ப. 1-36 மேல் உத்தராடம்

திதி- ஷஷ்டி பி. இரவு 1-03 மேல் ஸப்தமி

சுபநேரம்- 10-34—12-04

ராகுகாலம்- 3-04—4-34

மேஷம்- நிதானப் போக்கு நிலைமையில் உயர்வு.

ரிஷபம்- ஆயுதபயம் அவசர புத்தி.

மிதுனம்- வாழ்க்கைச் சுகம், வழியும் பிறக்கும்.

கடகம்- சிநேகிதர் பகை, செயலில் முடக்கம்.

சிம்மம்- குருவின் ஆசி, குறிக்கோள் நன்று.

கன்னி- இடமாறும் எண்ணம், இதய சுகம்.

துலாம்- உழைப்பில் உற்சாகம் பயன்தரும் நாள்.

விருச்சிகம்- பொருள் நஷ்டம், பொல்லாங்கு கேட்டல்.

தனுசு- பகைவர் பதுங்குவர், பார்த்து நட.

மகரம்- தனவரவு தாம்பத்தியம் சிறக்கும்.

கும்பம்- தூரத்துச் செய்தி, துயரின் தாக்கம்.

மீனம்- சுற்றம் வாழ்த்தும், சுகபோகநாள்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## ஆசிரிய[...]

### இப்படியும் ஒரு[...] 'கண்டக்டர்'

இலங்கைப் போக்குவர[...]துச் சபை பற்றியும் அத[...] ஊழியர்கள் பற்றியு[...] பொதுவாகப் பலரும் கு[...] கூறுவதுதான் வழக்க[...] ஆனால் நல்லதைச் செய்யு[...] போது பாராட்டவும் வே[...]டும்.

இம்மாதம் 3-ந் தி[...] மாலை 5 மணிக்கு யாழ்ப்ப[...]ணத்திலிருந்து வட்டு[...]கோட்டைக்குச் சென்[...] 'கடுகதி' பஸ்ஸில் நானு[...] பிரயாணம் செய்தேன். வ[...]யில் நான் ஓர் இடத்தி[...] இறங்கினேன். சிறிது நேர[...] கழித்த பின்னர்தான் என[...] மணிப்பேர்ஸ் தவறிப்பே[...]னதை உணர்ந்தேன். ப[...]ஸில் தான் தவறிவிட்டிருக்[...] வேண்டுமென்பதை உண[...]ந்து ஒரு மோட்டார் காரி[...] அந்தப் பஸ்ஸை பிடிக்க[...] சென்றேன். காரைநகரி[...] அந்தப் பஸ் நின்றது. எ[...]னைக் கண்டதும் அந்தப் ப[...] கண்டக்டர் திரு. வி. சி[...]ரத்தினம் 'இது உங்க[...]டையதா?' எனக் கேட்[...] மணிப்பர்ஸை தந்தா[...] முக்கியமான பத்திரங்க[...] இருந்த அந்த மணிப்பர்ஸ[...] பாதுகாத்துக் கொடுத்[...] அந்தக் கண்டக்டரை எ[...]வளவு பாராட்டினாலு[...]தகும். எல்லோரும் இ[...]ரைப் போலிருக்கவேண்டு[...] என்பதே எனது விருப்ப[...]

கணேசன்
யாழ்ப்பாணம்.

### மீண்டும்தலை தூக்கும் மலேரிய[...]

1930-ம் வருடங்களி[...] மலேரியாக் காய்ச்சல் இல[...]கையில் தலைவிரித்து அட்[...]டகாசம் புரிந்து வருடந்தோ[...]றும் பல்லாயிரக் கணக்கா[...] உயிர்களை விழுங்கியது[...] பின்பு 1935 அளவி[...] இலங்கை அரசாங்கம் டி.[...]டி.மருந்தின் உதவியோ[...] மலேரியா தடுப்பு இயக்[...] ஒன்றை ஆரம்பித்து கா[...] மேடுகள் எல்லாம் இம்மரு[...]ந்தைத் தெளித்து மலே[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ழியல்ல!

# ...மாழி

...உலகுடன் தொடர்பு
...ள்வதற்கும் ஆங்கிலம்
...றே போதுமானது. இந்
...ல் இத்தேவையைப்
...த்தி செய்ய முடியாது.

## ...ந்த ...காரம்

...ாழிப்பிரச்னைக்கு சிறந்த
...ாரம் ஒன்றுதான். கல்
...திட்டத்தில் ஆங்கிலத்
...க் கட்டாயபாடமாக்கு
...தன்று திர்மானிக்கப்பட்
...ப்பதால் அதையே என்
...ன்றும் மேற்கல்வி போத
...மாழியாகவும் நிர்வாக
...ழியாகவும்வைத்திருக்க
...ண்டும். இலக்கியம், கலை
...லியவற்றை வளர்ப்ப
...த தாய்மொழிகளை விரு
... செய்யலாம்.
(...ந்தியன் எக்ஸ்பிரஸ்)

## உள்ளக இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாண மாநகரசபையில் 4 வருடங்களுக்குமேல் ஒரு பகுதியில் கடமையாற்றும் ஊழியர்கள் வேறோர் பகுதிக்கு உள்ளக இடமாற்றம் செய்யப்படுவதற்கு விரும்பினால் இம்மாதம் 30-ம் திகதிக்குமுன் தமக்கு இதுபற்றித் தெரிவிக்குமாறு ஆணையாளர் கோரியுள்ளார். 5 வருடங்களுக்கு மேல் இங்கு தொடர்ந்து கடமையாற்றி வருபவர்கள் வெளியிடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படலாமெனத்தெரியவருகிறது.

இன்றுகந்த சஷ்டி விழாவின் முடிவு. ஆறு நாட்கள் கடுமையாக போராடியபின் சுப்பிரமணியக் கடவுள் சூரபத்மனையும் அவனுடைய தீய வர்க்கத்தையும் அழிந்தொழித்து தேவர்களுக்கு விடிவு கண்ட நன்னாள். இன்று கோயில்கள் பலவற்றில் சூரன் போர் நடக்கிறது. முருகப் பெருமானுக்கும் சூரபந்மனுக்குமிடையே ஆறு நாட்கள் நடந்த யுத்தத்தையே ஸ்கந்த சஷ்டி குறிக்கிறது.

ஸ்கந்த சஷ்டி விரதம் ஆரம்பமான நாள் தொடக்கம் இந்த ஆறு நாட்களும் மழை இடைவிடாது பெய்

## சொற்பொழிவு

அச்சுவேலி, திங்கள்

அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை 'கந்தசஷ்டி' என்னும் பொருள் பற்றி உடுவில் சிவஸ்ரீ முத்துச்சாமிக்குருக்கள் ஒரு சொற்பொழிவாற்றினார்.

## யாழ்ப்பாண...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று யாழ்ப்பாணம் பொலிஸில் புகார் ஒன்று செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இரு கார்ச்சாரதிகள் பொலிஸாரால் விசாரணை செய்யப்படலாமெனத் தெரிகின்றது [ந.நி.]

# சூரன் மடிவு; ஒக்டோபர் புரட்சி!

வதையும், வானம் 'உம்' மென்று இருள் கவிந்து கிடந்ததையும் கவனித்தீர்களா? சூரன் போர் இன்று முடிவதுடன் இந்த அடைமழையும் வெளிக்குமா?

சூரனும் அவனுடைய சகோதரர்களும்எப்படியோ சிவபெருமானிடம் அளப்பரிய பெரும் வரங்களைப் பெற்றுவிட்டார்கள். சூரன் அத்துமன் அழியா வரமும் பெற்று விட்டான். வரங்களைப் பெற்ற அசுர குலம் அவற்றை நல்வழியில் பிரயோகிக்காமல் தீய வழியில் உபயோகித்தது. தேவர்களை இம்சித்தார்கள், தவம் செய்வோரை துன்புறுத்தினார்கள். தர்மம் குன்றியது, அதர்மம் தலை தூக்கியது. அப்பொழுத 'ஒரு திரு. முருகன் வந்தாங்கு தித்தனன் உலகம் உய்ய!

அவுணர் படை அழிந்தது. அசுர குலம் மாய்ந்தது. அழியாவரம் பெற்றவனுகையால் சூரபத்மன் ஞான சக்தியாகிய வேற்படையினால் இரு கூறுகப் பிளக்கப்பட்ட போதிலும்,சேவலும் மயிலுமாக மாறி முருகனிடம் சுரண்புகுந்து கொண்டான்.

இந்த இருபதாம் நூற்றுண்டிலும் சூரனுடைய அசுர வர்க்கத்தை ஒத்த ஒரு மானிடப் படை அநீதியையும் அக்கிரமத்தையும் கைத்துணையாக நம்பி சில காலம் கொடுங்கோலாட்சி புரிந்தது. ருஷ்யா தேசத்தில் ஜார் மன்னர்களின் ஆட்சியில் பொதுமக்கள் சொல்லொணுத் துன்பத்துக்குள்ளானார்கள். மன்னர்கள் மாடமாளிகைகளில் குபேர வாழ்க்கை நடத்தி கும்மாளம் கொட்டி சாதாரண மனிதனின் அவசிய தேவைகளை நிறைவேற்ற தவறி விட்டனர்.

மக்கள் குலம் சமுத்திரம் போல சீறி எழுந்தது. 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இச் செகத்தினை அழித்திடுவோம் என்று வெஞ்சபதம் கூறியது. கோடானுகோடி பொதுமக்களின் சக்திக்கு முன் ஒரு குட்டிக் கும்பலின் கொட்டம் எம்மாத்திரம்?

ஜார் சக்கரவர்த்தி வீழ்ந்தான். ருஷியாவில் பொது மக்கள் ஆட்சி ஏற்பட்டது.

மாக கொண்டாடப் படுகிறது. ஐம்பது வருடங்களுக்குப் பிறகு ருஷ்ய மக்கள் எவ்வளவோ தூரம் முன்னேறியுள்ளார்கள் என்பது அவர்கள் முன்பு நடத்திய பரம ஏழை வாழ்க்கையிலிருந்து இன்று உலகின் பேரரசுகள் இரண்டில் ஒன்ருய் விளங்குகிருர்கள் என்பதிலிருந்து தெளிவாகிறது.

தீயவனுகிய சூரபத்மனும் கொடுங்கோலனுகிய ஜார்

# நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

இது நடந்தது 1917-ம் ஆண்டு நவம்பர் 7-ம் திகதி உலக சரித்திரத்திலேயே மிகப் பெரும் புரட்சியெனக் கருதப்படும் இந்த 'சூரன் போரின்' 50-வது ஆண்டு விழா இன்று மொஸ்கோ நகரில் வெகு கோலாகல

மன்னனும் வீழ்ந்து உலகில் ஓர் புது யுகம் பிறந்த தினம் ஒரே நாளில் வருவது தற்செயலாகவா, அல்லது ஏதாவதொரு மகா சக்தியின் திருவருளுக்கிணங்க திட்டமிட்டு நடப்பதா?

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

## இப்படியும் ஒரு 'கண்டக்டர்'

...லங்கைப் போக்குவரத்
... சபை பற்றியும் அதன்
...ியர்கள் பற்றியும்
...துவாகப் பலரும் குறை
...வதுதான் வழக்கம்.
...ல் நல்லதைச் செய்யும்
...து பாராட்டவும் வேண்
...

...ம்மாதம் 3-ந் திகதி
...ல 5 மணிக்கு யாழ்ப்பா
...த்திலிருந்து வட்டுக்
...ாட்டைக்குச் சென்ற
...கதி' பஸ்ஸில் நானும்
...யாணம் செய்தேன். வழி
... நான் ஓர் இடத்தில்
...ங்கினேன். சிறிது நேரம்
...த்த பின்னர்தான் எனது
...ிப்பேர்ஸ் தவறிப்போ
...தை உணர்ந்தேன். பஸ்
...ல் தான் தவறிவிட்டிருக்க
...ண்டுமென்பதை உணர்
... ஒரு மோட்டார் காரில்
...தப் பஸ்ஸை பிடிக்கச்
...ன்றேன். காரைநகரில்
...தப் பஸ் நின்றது. என்
...க் கண்டதும் அந்தப் பஸ்
...டக்டர் திரு. வி. சீவ
...தினம் 'இது உங்களு
...டயதா?' எனக் கேட்டு
...ணிப்பர்ஸை தந்தார்.
...கியமான பத்திரங்கள்
...ந்த அந்த மணிப்பர்சை
...துகாத்துக் கொடுத்த
...தக் கண்டக்டரை எவ்
...வு பாராட்டினுலும்
...ம். எல்லோரும் இவ
...ைப் போலிருக்கவேண்டும்
...பதே எனது விருப்பம்.

கணேசன்

...ழ்ப்பாணம்.

## மீண்டும்தலை ...க்கும்மலேரியா

...1930-ம் வருடங்களில்
...லேரியாக் காய்ச்சல் இலங்
...கயில் தலை விரித்து அட்ட
...சம் புரிந்து வருடந்தோ
...ம் பல்லாயிரக் கணக்கான
...யிர்களை விழுங்கியது.
...ன்பு 1935 அளவில்
...லங்கை அரசாங்கம் டி.டி.
... மருந்தின் உதவியோடு
...லேரியா தடுப்பு இயக்கம்
...ன்றை ஆரம்பித்து காடு
...மடுகள் எல்லாம் இம்மருந்
...தைத் தெளித்து மலேரி

யாவை இந்நாட்டிலிருந்து துப்புரவாக அழித்துத் தொலைத்தது.

இப்பொழுது மறுபடியும் இக் கொடிய நோய் இலங்கையில் சில இடங்களில் காணப்படுவதாகத் தெரிய வருகிறது. இந் நோயைக் காவித்திரியும் ஒருவித நுளம்பு வகை டி.டி..ரியைக் கண்டவுடன் மயங்கி மடிந்தது உண்மை தான்,

அப்படியானால் அது மறுபடியும் முளைத்தெழுந்தது எப்படி?

நுளம்புகள்முதலிய பூச்சி வகையின் மீது ஒருமருந்தை பிரயோகித்து வந்தால் சில காலத்தக்குப் பின் அவை அம்மருந்தின் சக்தியை எதிர்க்கும் வல்லமைபெற்றுவிடுகின்றன, ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு அம்மருந்து அவை மீதுபலிக்காது.டி.டி.ரி. இப்பொழுது எந்த பூச்சிக்குமே அவ்வளவு ஆபத்து விளைக்கக் கூடியதல்ல.

ஆகையால் இலங்கையில் மறுபடியும் ஒரு மலேரியாக் கொள்ளை ஏற்படுவதற்கு முன்பு நமது சுகாதார அதிகாரிகள் டி. டி. ரி.போன்ற இன்னொரு மருந்தை, வெளி நாட்டு உதவியுடனும் கண்டு பிடிக்க வேண்டும்.

பொ.மனோகரநாதன்

கொழும்பு

## பங்கு போடுகிருர்கள்

எனது பகுதியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 'நெஸ்பிறே' கடந்த நான்கு மாதங்களாகக் கேட்டு வருகிறேன். ஆனால் வரவில்லை வரவில்லை என்றே கையை விரிக்கிருர்கள்.பின் விசாரித்ததில் ஒரு குறிப்பிட்ட தொகை அந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு வழங்கப்படுவதாகவும் ,சிலர்மட்டும் பங்குபோட்டுக்கொள்வதாகவும் அறிந்தேன்.இப்படியான ஊழல்களால் எம்மைப்போன்ற ஏழைகளே பாதிக்கப்படுகின்றனர்.சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவர்கள்மீது நடவடிக்கை எடுப்பார்களா?

—கே.சுந்தரம்

வல்வெட்டித்துறை

## ஜீ. ஜீ. சொற்பொழிவு

3-11-67 'ஈழநாடு' பத்திரிகையில் தலையங்கத்தின் கீழ் வெளியான விபரம் சரியல்ல. திரு. பொன்னம்பலம் ''தமிழர்களுக்குப் பல்கலைக்கழகக் கல்வி'' என்ற பொருள்பற்றியே 9-ந் திகதி பிற்பகல் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் சொற்பொழிவாற்றவிருக்கிருர்.

க. ஜெயராசா

கௌரவப் பொதுக்காரியதரிசி,
கச்சேரி நலன்புரிச்சங்கம்.

# திருமலையில் தொழிலாளர் யூனியன் வெற்றிவிழா

## கொழும்பிலிருந்து மோட்டார் பவனி

திருக்கோணமலை, திங்கள்


திருக்கோணமலை துறைமுகம் தேசியமயமாக்கப்படும் என அரசாங்கம் செய்துள்ள தீர்மானத்தைத் தொடர்ந்து இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கத்தின்96 கிளைகளின் தலைவர், காரியதரிசி போன்றவர்கள் மற்றும் தாய்ச்சங்கத்தின் பெரிய உத்தியோகத்தர்கள் கொழும்பிலிருந்து மோட்டார் பவனியில் இம்மாதம் 8-ந் திகதி இரவு புறப்பட்டு 9-ந் திகதி காலைஇங்கு வந்து சேருவார்கள். இங்கு மாமெரும் ஊர்வலத்துடன் இவ்வைபவம் ஆரம்பமாகி பொதுக்கூட்டமொன்று நடாத்தப்பட விருக்கின்றது இக்கூட்டத்தில் இலங்கை வர்த்தக சிப்பந்திகளின் பொதுக்காரியதரிசி திரு. பாலா தம்பு பிரதம பேச்சாளராகஇருப்பார்.இதைத் தொடர்ந்து பல கலைநிகழ்சிகளும், வாணவேடிக்கைகளும் நடைபெறவிருக்கின்றன.

## வேட்டைக்காரர் தொல்லை

### அரசாங்க அதிபருக்கு மகஜர்

முல்லைத்திவு,திங்கள்

முல்லைத்தீவுப் பகுதியில் உத்தரவு பெருது வேட்டையாடுவோர் தொகை அதிகரித்துள்ளதாகவும், காட்டில் நிற்கும் கட்டாக்காலிமாடுகளை ஒரு சிலர் சுட்டு மான் என்றும், மரை என்றும் பொது மக்களுக்கு விற்றுப் பணம் சம்பாதிப்பதில் ஈடுபட்டுள்ளதாகவும், இது போன்ற செயல்களுக்கு இடம் கொடுத்ததன் காரணத்தால் தற்போது ஊரா ரின் மாடுகளிலும் கைவைக்கிருர்கள் என்றும் இது போன்ற பாதகச் செயல்களை உடனடியாக நிறுத்தத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படியும் பொது மக்கள் சிலர் வவனியா அரசாங்க அதிபரை மகஜர் மூலம் கேட்டுள்ளதாக அறியப்படுகிறது.



சோவியத் யூனியனில் உள்ள பிரமாண்டமான அணைக்கட்டுகளில் ஒன்று இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி பொலிஸ் அதிகாரிகள் பலர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பொலிஸ் அதிகாரி திரு. பொங்லோ அடுத்தவருடம் 1-ம் திகதி முதல் நுவரெலியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருக்காக கொழும்பு கறுவாக்காடு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. இராஜசுந்தரம் யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதியில் நடைபெறவிருக்கும் மற்றைய பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் பற்றிய விபரங்கள்:-

காங்கேசன்துறை தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மூர்த்தி கொட்டாஞ்சேனைக்கும், யாழ்ப்பாணம் போக்குவரத்துப்பகுதி இன்ஸ்பெக்டர் திரு. கந்தையா காங்கேசன்துறை கள்ளக் குடியேற்றத் தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டராகவும், யாழ்ப்பாணம் சப் இன்ஸ்பெக்டர் திரு. சமரக்கோன் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கும் பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. செல்லையா, பளை பொலிஸ் நிலையத்துக்கும், யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சகாயம் கண்டி பொலிஸ் நிலையத்துக்கும், காங்கேசன்துறை குற்றத் தடுப்பு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சிவபாதம் கொழும்பு பொலிஸ் நிலையத்துக்கும், கோப்பாய் பொலிஸ் நிலைய அதிகாரி திரு. தர்மரத்தின முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கும், முல்லைத்தீவு பொலிஸ் அதிகாரி திரு. தேவசகாயம் கொழும்புக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்காக இன்ஸ்பெக்டர் திரு. ராஜகுலசிங்சிங்கம் காங்கேசன்துறை தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டராகவும், இன்ஸ்பெக்டர் திரு. புஸல்ல யாழ்ப்பாணம் போக்கு வரத்துப் பகுதி இன்ஸ்பெக்டராகவும், திரு. எச். பி. ஜெயசூரியா, பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டராகவும், சாவகச்சேரி இன்ஸ்பெக்டர் திரு, ஜெயதிலகா யாழ்ப்பாணத்துக்கும், தலைமன்னார் இன்ஸ்பெக்டர் திரு, பெர்னாண்டோ சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டராகவும், இன்ஸ்பெக்டர் திரு. ஹமகொட, காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டராகவும், காங்கேசன்துறை இன்ஸ்பெக்டர் திரு. சில்வா வவுனியாவுக்கும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மன்னார் உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. அபயசேகரா திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருக்காக திரு. வை. டி. செனரத் மன்னார் உதவி பொலிஸ் சுப்பிரின்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். (ந. நி)

## பாதை சீர்கேடு

சுழிபுரம், திங்.

பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலை மாணவர்களில் ஒரு பகுதியினர் பாடசாலைக்கு மேற்குப் புறமாகவுள்ள பாதை செப்பனில்லாததால் போக்குவரத்துச் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டம் அடைகின்றனர். குறிப்பாக மழைகாலத்தில், கிடங்கும் சேறும் சுகாதாரச் சீர்கேடும் மிக்க இப்பாதையைத் திருத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வருவார்களா என இம் மாணவர்கள் ஏங்குகின்றனர்.

## பனிப்புலம் மக்கள் மகஜர்

சுழிபுரம், திங்.

பனிப்புலம் கிராமத்துக்கு வைத்தியசாலை ஒன்று உடன் நிறுவித் தரும்படி அப்பகுதி மக்கள் கேட்டும் இதுவரை கவனிக்கப்படாததால் அப்பகுதி மக்கள் மேலும் ஒரு நீண்ட மகஜரை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளனர். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கத்துக்கு இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ் 7-11-67**

[செய்திகள்:- காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

**344 மீற்றர் & 61 மீற்றர்**
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 சடாட்சரமகிமை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**
பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் விருப்பம்.

**344 மீற்றர் & 61 மீற்றர்**
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சூரசங்காரம்-அஞ்சல்.

இரவு 6-15 குதூகலம், 6-45 கிராமசஞ்சிகை, 7-00 பாவலம், 7-30 நிலையஒலிப்பதிவுகள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம்.


# 5

★ நீடித்து உழைப்பது
★ சௌகரியமானது
★ நவீனமானது
★ சிக்கனமானது

# இந்த 5 சொற்கள் எஸ்-லோன் பீலியை உருவாக்க உதவின

உறுதியான எஸ்-லோன் பீவீசீ மழைநீர்ப் பீலிகள் நிரந்தர உழைப்பை நினைவில் வைத்துத் தயாரிக்கப்பட்டவை. உலோக மழைநீர்ப் பீலிகளை அரித்தழிக்கும் கறளுடன் கட்டியழும் பிரச்சினை, விழலுக்குப் பணத்தை வீணே விரயமாக்குவோருக்கே இனிச் சொந்தம்!

இலகுவில் பொருத்தக்கூடிய மழைநீர்ப் பீலி இது. இதைப் பொருத்த அதிக வேலையாட்கள் அவசியமேயில்லை. கறள் அரித்த உலோகப் பீலியைக் கழற்றி வீசும் அதேயளவு விரைவாக இந்தப் பீலியைப் பொருத்தி விட முடியும்.

நவமான வீடுகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும். அவற்றின் புதுப் பாணிக்கு உகந்த அழகு வளைவுள்ள எஸ்-லோன் பீலிகளைப் பொருத்துவதே பொருத்தம். பழைய பத்தாம் பசலியான விலை கூடிய உலோக வடிகால் ரகப் பீலிகளுக்கு விடை கொடுங்கள். உங்கள் கட்டிடங்களுக்கு எஸ்-லோன் கொண்டு உன்னதமான புது மெருகூட்டுங்கள்.

நாளது வரை, மழைநீர்ப் பீலிகளில் மகத்தான இலாபக் கொள்முதல் எஸ்-லோன். இடி மின்னல் அடை மழைக்குப் பின் இடைக்கிடை பீலி மாற்றும் இடர்ப்பாடுகள் இனி இல்லை. அந்தக் கவலையை விட்டொழிக்க விரும்புவோர்க்கென்றே தயாரானது எஸ்-லோன்!

S-lon

எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த இலவச தொழில் நுட்ப ஆலோசனையினதும் சேவையினதும் ஆதாரம் கொண்டது.

மகாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டட்

the maharaja organisation

MOP-72


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மறைத் தேர்வில் சான்றிதழ் பெறுவோர்

கொழும்பு, திங்,

சென்ற யூலைத் திங்களில் தமிழ்மறைக்கழகம் நடத்திய அகில இலங்கைத் தமிழ் மறைத் தேர்வுக்குத் தோற்றித் தக்க திறமை காட்டிச் சான்றிதழ் பெறுவோர் பெயர்களைக் கீழே காண்க: பெயர்களுக்கு முன்னுள்ள இடங்கள் தேர்வு நடைபெற்ற இடங்களாகும் ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் வகுப்பில் தேறியவர்களுடைய பெயர்களுக்குப் பின் அடைப்புக் குறிக்குள் [மு] இடப்பட்டுள்ளது.

## மத்திய பிரிவு

அக்கரைப்பற்று: க பவானி [மு], சி. தமயந்தி [மு] க சந்திரா, பொ முத்துலிங்கம், க முருகப்பன், ச கோபாலபிள்ளை-

இணுவில்: க சிவராசா [மு], கு கலாவதி [மு] வே கமலேஸ்வரி[மு], வீ நாகேஸ்வரி [மு] கா சாரதாதேவி [மு], ம இரத்தினசிங்கம், ந செல்வரத்தினம், பொ பாலசுந்தரம், சா முத்துக்குமாரசுவாமி. ச யோகேந்திரம், மு விஜயரகுநாதன், த இராசலட்சுமி கு. இராசேஸ்வரி. சு இராசேஸ்வரி, இ மகேஸ்வரி, இ மேனகா, வி யோகேஸ்வரி.

உடுவில்: மே மனோகரி [மு], மே சகுந்தலா.

உரும்பராய்: கு குலரத்தினசேகரம் [மு], ந பிரபுதேவன்.

உருத்திரபுரம்: ம இந்திராவதி [மு], த கனகேஸ்வரி.

கிளிநொச்சி: வே சிவநாதன், செ மேனகாராசமணி.

ஹற்றன்: கோ திருப்பதி [மு], க பத்மினி [மு], அ லிங்கேஸ்வரி [மு], க ஜெயராணி [மு], க சத்தியபாமா [மு], பெ வனஜா [மு], வை இராசரெத்தினம், சி முனுசாமி, க தனலெட்சுமி, அ புஸ்பம், அ விஜயலட்சுமி, வெ. யோகநாதன்.

சுன்னுகம்: வ கலைவாணி, வ சிவசோதி, பொ புஸ்பம்.

நீர்கொழும்பு: சு தேவசேனு.

பளை: சி முத்துப்பிள்ளை [மு], க தங்கேஸ்வரி [மு] சி பரிமளம், து. தெய்வானையம்மா.

பூனகரி: பொ பராசக்தி [மு], கா கார்த்திகேசு, க புவனேஸ்வரி, செ சுந்தரலிங்கம், இ மகேஸ்வரி, கா மகேஸ்வரி.

மட்டக்களப்பு: ம சிவகாமசுந்தரி, பொ மங்கையர்க்கரசி.

மானிப்பாய்: க தெய்வகுலரத்தினம்[மு]செ செல்வராசா.

முரசுமோட்டை: சி அம்பலவாணர் [மு], பொ. நாகேஸ்வரி [மு], க வன்னியசிங்கம், சி தனபாலசிங்கம், மு சிவலிங்கம், க இந்திராதேவி, வே இந்திராணி, சி தவமணி, சி தவமணி.

யாழ்ப்பாணம்: சு பரமேஸ்வரன்.

வட்டுக்கோட்டை: நா பரமேஸ்வரி, சி சரஸ்வதி.

## கீழ்ப் பிரிவு

இணுவில்: அ இரவீந்திரன், ஐ இராசேஸ்வரி, க சிவகலா, ச சிவனேஸ்வரி, சி விஜயசேனு, க ஆனந்தராசா [மு], க சித்திவிநாயகம் [மு].

உடுவில்: எஸ் மனோரஞ்சிதம் [மு], சி சாரதாதேவி [மு], செ மோகாந்தி [மு], சி யோகேஸ்வரி [மு], செ சியாமளா [மு]. ஆ இராசேஸ்வரி [மு] சி. சோதிமணி [மு] அ மாலதி [மு], ஜீ நந்தினி [மு], ச மாதினி [மு] து நித்திரா, ந சிவலட்சுமி எஸ் சுவர்ணகாந்தி, அ துஸ்யந்தி, ப இந்துமதி.

உரும்பராய்: கு குலஞானவதி [மு], ந கமலாதேவி, கு குலரஞ்சிதவதி.

கிளிநொச்சி: அ அம்பிகாவதி [மு], இ இந்திராணி, இ குருமூர்த்தி.

ஹற்றன்: இ இராமநாதன் [மு], ம கணபதி [மு], தே சக்கரவர்த்தி [மு]. வை சுந்தரலிங்கம்[மு], தே இராசேஸ்வரி[மு], இ இரத்தினமாலா [மு], து விஜயலட்சுமி [மு] மு இராமசாமி, ரெ ஆனந்தராசா, அ கோபாலசாமி, அ பூபாலசிங்கம், ம காந்திமதி, பொ தனம், மு தேவி, க புஷ்பராணி, கி கோமதி, கே மோகன், க நீலவர்ணன்,

### கீழ்ப்பிரிவு

சுன்னுகம்: சி. பத்மினிதேவி[மு], சி. கமலாதேவி [மு], அ, புராந்தகன் (மு), க. சந்திரலீலா, செ. செல்வமலர், க. மேனகா, க. மோகனபுஸ்பம், ஆ. வசந்தா, சி. ஜெயந்தா, சி. ஜெயமலர், வி. கிரிதரன்.

காரைநகர்: ஆ. பரமேஸ்வரி.

துணுக்காய்: க. கனகலிங்கம, து. மனோரஞ்சிதம்.

தெல்லிப்பழை: க ரூபசோதி [மு], சொ. கணேஸ்வரி, ஆ. இராசேஸ்வரி, த. வசந்தமலர்.

நீர்கொழும்பு: வே. ஞானசுந்தரி பகவதி (மு, இ. சரோஜினி [மு], மு. மங்களேஸ்வரி [மு], இ சோமாஸ்கந்தன், தி செல்வராணி, மு. தங்கம்மா, இ. பரிமளாஜெயந்தி.

பளை: தா. தர்மராசசிங்கம்.

பருத்தித்துறை: ஆ. சுப்பிரமணியம், க. பரமேஸ்வரி, பெ. மேரிராணி, அ. பத்மலீலா.

பூனகரி: வே. பாலசுப்பிரமணியம் [மு], ஆ. லீலாவதி [மு], சு மங்களேஸ்வரி (மு), ச. திருநாவுக்கரசு, செ மாசிலாமணி, பொ. இராமச்சந்திரன், ந அமிர்தலிங்கம், கா. புட்பநாதன், ந. உதயலோசினி, ப. குகானந்தலட்சுமி, ஆ. நாகம்மா, ஆ. கமலேஸ்வரி, ஆ. இரஞ்சிதமலர், க. கமலாதேவி, கா. ஞானேஸ்வரி.

மட்டக்களப்பு: க. குமாரசுவாமி, இ. தானியலட்சுமி, பொ. விசாலாட்சி, க புஸ்பராணி, சி. சோதிமணி [மு], தா. கோவிந்தராசா (மு), க. நல்லதம்பி, பொ. தங்கரத்தினம், ந. மோகனதாஸ்.

மாத்தளை: இ. இந்துமதி, த. சூரியகலா, பொ. தேவகி, பொ. வனஜா சாந்தகுமாரி, செ. விஜயலக்ஷ்மி, டீ. சரீபா, ஜோ. கெலன், வீ. இராசேஸ்வரி

மானிப்பாய்: க. கமலாதேவி (மு), இ. அரியதுரைமணி, அ. இரவீந்திராணி, சி. றனித்தா. சி. யுவராசன்.

முரசுமோட்டை: க.சின்னராசா [மு], சி. சுப்பிரமணியம் [மு], செ. பரமநாதன் (மு), வே. யேசுதாசன் (மு], மு. கமலாம்பிகை (மு), மு. ஞானசௌந்தரி (மு), இ. தனலட்சுமி [மு], க. திரேசம்மா [மு], சி. வரதலட்சுமி [மு], பொ. மகாதேவா (மு), க. மகேந்திராணி[மு], க. தவமணிதேவி [மு], இ. கசேந்திரன், து. பாலச்சந்திரன், த. இராசாத்தி.

யாழ்ப்பாணம்: சி. சுகுனேஸ்வரன்.

வல்வெட்டித்துறை: ச. இரவிச்சந்திரன் (மு), பா. இரவீந்திரராசா [மு], தே. பரஞ்சோதி (மு), து.வெற்றிவேல், சு. கேசவன், சு. சுவேந்திரன், செ. சித்திரராசா, பா. இரவீந்திரன், க. சிவாஜிலிங்கம், க. இராசேஸ்வரன், பொ. பாலசிகாமணி, சோ. சிவநாதன், பா. குகதாஸ், ச. இராஜகுமார், ச. பகீரதன், ப. ஜெயப்பிரகாசம், நா.காந்தரூப ராஜா, சொ. பிரேமாவதி, இ. அமுதா, வே. கிருஷ்வைதனு, ஆ. இராசேஸ்வரி, மு. பிரேமராதா, சா. சுகந்தி.

வேலணை: ஆ. உருத்திராதேவி, சி, சரஸ்வதி.

### தொடக்கப்பிரிவு

உடுவில்: க. சீலன் (மு), கா. ராஜவதனு.

உரும்பிராய் செ: சிவராசா (மு). ந. இராமதேவன் (மு) ந. சந்திரதேவி (மு, ச. மகேசன், மா, பிரபாகரன், ந, இந்திராதேவி.

உருத்திரபுரம்: நா.இரதி, கா. கிருஷ்ணபகவான், கு. சிவபாலன், ப, உலோகநாயகம், த, கமலாதேவி, செ, இந்துமதி.

கிளிநொச்சி (இந்து): த. கலைவாணி(மு), து. சரோசா [illegible] தே, வாசுகி: ம. இந்திராணி

உறுதியானதும்
நீடித்து உழைப்பதும்
தன்னிகரற்றதுமான
"வைத்திலிங்கம்ஸ்"
இருப்பு - பித்தளை மர ஸ்குறு ஆணிகளை
நீங்கள் வாங்குவதனுல்
ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு
உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள்
என்பதை மறவாதீர்கள்.
தயாரிப்பாளர்கள்:-
என்.வைத்திலிங்கம்நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனகதெரு, கொழும்பு. 12
தொலைபேசி: 7143 — 2029
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

# காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி

## கமிட்டி பரிசீலனை

கொழும்பு, திங்கள்

தேசியசேவைகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம் ராஜேந்திராவின் தலைமையில் காங்கேசன்துறைத் துறைமுக அபிவிருத்தி பற்றி ஒரு விசேஷ கமிட்டி ஆராய்ந்துவருகின்றது.

சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் டாக்டர் வி. பேரம்பலம், துறைமுகக் கூட்டுத்தாபனப் புள்ளிவிபர உத்தியோகத்தர் திரு. ஈ. நடராஜா, திட்ட இலாகாவைச் சேர்ந்த திரு பி. டி. ஸி. விஜயசிங்கே ஆகியோர் இக்கமிட்டியின் மற்ற அங்கத்தவர்களாவார்கள்.

காங்கேசன்துறையை ஒரு கைத்தொழில் மாவட்டமாக அபிவிருத்திசெய்வதை மனதிற்கொண்டு துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை மறுபரிசீலனை செய்யும்படி இக்கமிட்டி கேட்கப்பட்டுள்ளது.

—

ச, உபயசேகரம்பிள்ளை மா: திருக்குமரன், சு. மர்மலானந்தகுமரன்: மு: நித்தியானந்தமூர்த்தி, க, கருணைகரன், அ: தேவராணி.

ஹற்றன்: அ சகுந்தலா [மு], இ புவனசுந்தரி [மு] சி கலையரசி [மு], இ திலகவதி [மு], சொ கனகேஸ்வரி[மு], க இரத்தினேஸ்வரி [மு], இரா புஸ்பலீலா [மு]. வை ஜோதி, கோ மணிவண்ணன், வை கலாதேவி, நா தனலட்சுமி, வை. கௌசல்யா.

காரைநகர்: க.பாலசுப்பிரமணியம்.

கிளிநொச்சி [திரேசா]: வை பாமினி [மு], சு பாக்கியம், ந ஜெயந்தினி, தி இந்துமதி, இ இரத்தினவல்லி, க ஸ்ரீரஞ்சனி.

### தொடக்கப்பிரிவு

கொழும்பு: ந. பாலச்சந்தர் [மு].

சாவகச்சேரி: சி. சரோசாதேவி [மு], கு மகேந்திரன், ச. கணேசலிங்கம், சி. சண்முகாநந்தசர்மா, கு. நந்தகுமார். ச. யோகநாதன்

சுன்னுகம்: சோ. மைத்திலி, [மு], அ. சிவகுமாரி, தே. வசந்தா.

துணுக்காய்: மு. கிருஸ்ணநவரட்ணராசா, ஐ. சித்திரலேகா, ச. நாகேஸ்வரி, இ. ஜெகதாம்பாள்.

தெல்லிப்பழை: மு. சௌந்தரராசன் [மு], க. நந்தகுமார் [மு], ந பரஞ்சோதி [மு], இ. மகேஸ்வரன் [மு], ச. அம்பிகாபதி [மு], தி. சிவானந்தி [மு], சி. தவமணிதேவி [மு], வ. மகாலட்சுமி [மு], கா.விசயகுமாரி [மு], சு. ஞானேஸ்வரி [மு], பொ. இரமேஸ்குமார் [மு], ந. அனுசா [மு], ந. ஜெயகுமாரன் சி. அன்னலட்சுமி, தி. சிவஅம்பிகா, வா. சயந்தன், வி. ஐம்பநாதன், மு முருகதாசன், சொ. சிவனேஸ்வரி கி. சியாமளா, ச. நளினி.

பருத்தித்துறை: சி. செல்வராணி [மு], த அருட்செல்வன், ஐ. நாகேஸ்வரி.

மட்டக்களப்பு; செ. குலசேகரன் [மு], சு. இராகவன் [மு].

மாத்தளை: அ. சுமதி [மு] சா. யூனிஸ்ராணி[மு], ஜோ. எலிசபெத்ஜயந்தி, பெ. பரமேஸ்வரி, த. மஞ்சுளா.

மானிப்பாய்: அ. விவேகானந்தன் [மு], இ. அரியதவராணி [மு], க. நாகசுலோசனு [மு], க. சரோஜினி [மு], இ. சத்தியபாமா [மு] க. செல்வராணி [மு], தி. ஸ்ரீதங்கராசா, வே. இராசேஸ்வரி.

முல்லைத்தீவு: க. ஜெயராணி.

முரசுமோட்டை: மா. ஜெயபாலச்சந்திரன் [மு], க அன்னலட்சுமி [மு], சி. திலகவதி [மு], ப.பரமேஸ்வரி [மு], க.புனிதவதி [மு], த. விமலாதேவி [மு], நா. விமலராணி [மு], சி.சந்திரபாலன், கோ.அழகாம்பிகை

வேலணை: பி. படிகலிங்கம் (மு), கு. ஜயஈஸ்வரி (மு), க. கமலா (மு), ந. தெய்வேந்திரன்.

நாவலப்பிட்டி: வை. அருட்செல்வன் (மு), வீ. ஜெகதீசன் (மு).

மே வங்காள

# முதல் மந்திரி அறிக்கை

கல்கத்தா, நவ. 6

மேற்கு வங்காள மந்திரி சபையை அகற்றும் உரிமை அதை உருவாக்கிய மேற்கு வங்காள சட்டசபைக்கு மட்டுமே உள்ளதென நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கு வங்காள முதல் மந்திரி திரு. அஜொய் முக்கர்ஜி கூறியுள்ளார்.

மேற்கு வங்காள மந்திரி சபையைக்கலைத்து விட்டு அரசியல் அதிகாரத்தை கவர்னர் மேற்கொள்ளலாம் எனச் சில வட்டாரங்கள் வெளியிட்ட ஹேஷ்யங்களை யொட்டியே முதல் மந்திரி இந்த அறிக்கையை வெளியிட்டார்.

நேற்று கவர்னரைச் சந்தித்து உரையாடிய பின்னர் ஆளுங்கட்சியான ஐக்கிய முன்னணியின் அவசர கூட்டமொன்றுக்குத் திரு. முக்கர்ஜி தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தின் முடிவிலேயே முதல் மந்திரி மேற்கூறப்பட்ட அறிக்கையை வெளியிட்டார்

# இருபிரிவாக்க முயற்சி

சுழிபுரம், திங்கள்

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்தை இரண்டாகபிரிக்கமுயற்சிகள் நடைபெற்று வருவாதாகத் தெரிகிறது. இதன் மூலம் சுதுமலைப் பகுதி தனியாகவும் மற்றப் பகுதிகள் ஒரு பகுதியாகவும் இயங்கும். இதற்கான முயற்சிகளை யாழ். மேற்கு கூட்டுறவு ஆணையாளர் கவனித்து வருகிறார்.

இது இவ்வாறிருக்க இவ்விதபிரிவினையால் பெரும் சிக்கல்கள் ஏற்படும் எனவும் எனவே சங்கத்தைப்பிரிக்க வேண்டாமெனவும் ஒரு பகுதியினர் கூட்டுறவு ஆணையாளரை வேண்டியுள்ளதாகஅறியப்படுகிறது.

# பிரயாணிகள் தப்பினர்

சங்கானை, திங்கள்

கிளிநொச்சியிலிருந்து காரைநகர் சென்று கொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்று சங்கானையில் உள்ள வளைவொன்றில் பாதையை விட்டு இறங்கி குடைசாய்ந்தது. தெய்வீதினமாக பிரயாணிகள் எவரும் காயத்திற்குள்ளாகவில்லை.

# ஊரடங்கு சட்டம்

ஷில்லொங், நவ. 6

அஸ்ஸாமில் நேற்று நடைபெற்ற சில வன்முறைச் சம்பவங்களை யொட்டி ஊரடங்குச் சட்டம் சிலபகுதிகளில் மீண்டும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் இரண்டு சமாதான சபைகள்

யாழ்ப்பாணம், திங்கள்

தெல்லிப்பழை வீமன்காமத்திலும், கொடிகாமத்திலும் இரண்டு சமாதான சபைகள் வெகுவிரைவில் நிலைப்படும். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ்மாவட்ட பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட மாநாடொன்று நேற்று மாலை நடைபெற்றது.

வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் இம்மகாநாடு நடைபெற்றது. வீமன்காமத்தில் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், சுன்னாகம் பட்டின சபைத்தலைவர் திரு. பொ. நாகலிங்கம் ஆகியோர் உட்பட அப்பகுதியில் வாழும் இருபகுதியினரையும் கொண்ட சமாதானசபையொன்றை கூடிய கெதியில் அமைபதாக இங்கு முடிவு செய்யப்பட்டது. தற்போது வெளிநாட்டிலிருக்கும் சாவகச்சேரி எம் பி. திரு. நவரத்தினம் இங்கு வந்ததும் கொடிகாமத்திலும் சமாதான சபை நிறுவப்படும்.

இம் மகாநாட்டுக்கு பருத்தித்துறை, காங்கேசன்துறை. சாவகச்சேரி, கோப்பாய், சங்கானை, சுன்னாகம், ஆனைக்கோட்டை, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் கலந்துகொண்டனர். [ந.நி.]

# வாலிபருக்கு கத்திக் குத்து

### நள்ளிரவில் களவாடச் சென்றராம்

யாழ்ப்பாணம், திங்கள்

களவாடச் சென்றதாகக் கருதப்படும் வாலிபர்கோஷ்டியொன்றின் முக்கிய நபர் ஒருவர் கத்திக்குத்துக்குள்ளானர். இவரை அந்தக் கோஷ்டியைச் சேர்ந்த வேறொரு வாலிபரே குத்தியதாகச் சொல்லப்படுகின்றது.

வண்ணார்பண்ணையிலுள்ள வீடொன்றில் நேற்று நள்ளிரவு இச்சம்பவம் நடைபெற்றதாகப் பொலிசில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த வாலிபர்கள் குறிப்பிட்ட வீட்டுக்கு களவாடச் சென்றதாகவும், அந்த வீட்டுச் சொந்தக்காரரும், இந்தக்கோஷ்டியைச் சேர்ந்த வாலிபர் ஒருவரும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்தவண்ணம் நிலத்தில் புரண்டு கொண்டிருக்கையிலேயே, வீட்டுச் சொந்தக்காரருக்கு மற்றைய வாலிபர்களுள் ஒருவர் கத்தியால் குத்திய போதே தற்செயலாக இவருக்குகத்திக்குத்துவிழுந்ததாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

இது சம்பந்தமாக பொலிஸ் சார்ஜன்ட் திரு. நவரத்தினம்புலன்விசாரணை செய்துவருகின்றார். கத்திக் குத்துக்குள்ளான திசராசா (25 வயது) என்ற இளைஞர் படுமோசமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [ந.நி.]

# அரசியல் சட்டம்பற்றி ஆராய புதிய கமிட்டி

### 15 பேர் நியமனம்

கொழும்பு, திங்கள்

அரசியல் அமைப்புச்சட்டத்தை திருத்தி அமைப்பது குறித்து ஆராய்வதற்காக புதிதாக 15 பேர்கொண்ட பார்லிமெண்ட் கமிட்டியொன்றை நிறுவுவதற்கான பிரேரணையொன்றைநேற்று காணி, நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்தார்.

இக்கமிட்டி எங்கே, எவ்வாறு, எப்பொழுது கூட வேண்டுமென்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் பிரதம மந்திரிக்கு வழங்கப்பட்டுள்ளது. பிரேரணையின் மீது திரு. சில்வா பேசும்போது அரசியல் சட்டத்தைத்திருத்துவதற்காக பலமுறைமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்தமுறை ஏற்படுத்தப்பட்ட கமிட்டிதான் ஓர் இடைக்கால அறிக்கை சமர்ப்பித்தது. அந்தக்கமிட்டியின் அறிக்கைகள் புதிதாக அமைக்கப்படும் கமிட்டியிடம் சமர்ப்பிக்கப்படும் என்ருர்.

எதிர்க்கட்சியின் சார்பில் பாணந்துறை எம். பி. திரு லெஸ்லி குணவர்த்தன பேசுகையில், தற்போதுள்ள அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்வதையல்ல, புதிய அரசியல் சட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்றே நாம் கூறுகின்ருேம். அதனுல் இந்த பிரேரணையை எதிர்க்கின்ருேம் என்ருர்.

பிரேரணை 25 சாதகமாகவும் 9 வாக்குகள் எதிராகவும் பெற்று நிறைவேறியது.

கமிட்டியில் இடம்பெறுவதற்கு பின்வருபவர்களின் பெயர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பிரதமர் டட்லி சேனநாயகா, கைத்தொழில் மந்திரி பிலிப்குணவர்த்தன, ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, உணவு மந்திரி எம். டி. பண்டா, ஜனுப் நயினுமரிக்கார், திருவாளர்கள் பீட்டர்கெனமன் லெஸ்லி குணவர்த்தன, எஸ். ஜே. வி. செல்லவநாயகம், பீலிக்ஸ டயஸ் பண்டாரநாயகா, எஸ். தொண்டமான், டாக்டர் என். எம். பெரேரா, ஜி. ஜி. பொன்னம்பலம், திருமதி சிறிமா பண்டாரநாயகா, மைத்திரிபால சேனநாயகா.

### யாருடையது?

யாழ்ப்பாணம், செவ்.

மருதனுமடம் சந்தியில் கார் பதிவுப் புத்தகமொன்றும் இன்ஸ்சூரன்ஸ் கார்ட் ஒன்றும் திரு. க. திருநாவுக்கரசு என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

### வங்கி ஊழியர்

மூதூர், திங்கள்

மூதூரில் யாழ்ப்பாணத் தபால் பட்டுவாடா இரண்டு தினங்களின் பின்பே விலாசதாரருக்கு கொடுக்கப்படுவதாயும், இதனுல் அடையும் அசௌகரியம் குறித்தும் மூதூர்ப்பகுதி தமிழ் வாலிபர் சங்கம் அனுராதபுரம் தபால் மேற்பார்வை அதிகாரிக்கு முறைப்பாடு செய்திருந்தது. தற்போது இதற்குப்பதில் கிடைத்துள்ளது.

பிரஸ்தாப அதிகாரியின் பதில் தற்சயம் நிதி போதாமையால் யாழ்ப்பாண தபால் பட்டுவாடா செய்ய மேலதிக ஊழியரை நியமிக்க முடியாதுள்ளதாயும் யாழ்ப்பாணவாசிகள் காரியாலய நேரங்களில் தமக்கான கடிதங்களைப்பெற்றுக் கொள்ள வசதி அளிக்கப்படும் என்றும் கூடிய கெதியில் இது கவனித்து நடைமுறைப்படுத்தப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது விடயமாய் இன்னுமொரு மகஜரை பிரஸ்தாப அதிகாரிக்கு அனுப்ப தமது சங்கம் தீர்மானித்துள்ளதாக சங்கக்காரியதரிசி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

### வங்கி ஊழியர் வேலைக்கு திரும்பினர்

கடந்த 120 தினங்களாக நடைபெற்று வந்த திருமலை மாவட்ட கூட்டுறவு வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் அண்மையில் முடிவடைந்துள்ளது. பல தடவைகளில் ஊழியர்கள் பிரதிநிதிகளும் வங்கி நிர்வாகமும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும்தொழில் அமைச்சும் கலந்து ஒவ்வொரு பிரச்னை குறித்தும் தீர்க்கமாக முடிவு எடுத்துக்கொண்டதன்பின்பே பிரஸ்தாப வேலைநிறுத்தம் கைவிடப்பட்டதாக ஊழியர் சங்கப்பிரதிநிதி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

பிரஸ்தாப ஊழியர் வேலைநிறுத்தம் முடிவடைந்ததால் இது காலமும் இரு வருடம் இயங்கிவந்த மூதூர் வங்கிக் கிளையும் தற்சமயம் தன் முழு ஊழியர்களையும் கொண்டு செயல்பட ஆரம்பித்துள்ளது. இதன் காரணமாக விவசாயக்கடன்களும், மற்றும் வங்கி பற்றுவரவுகளும் வழமைபோல நடைபெறுகிறது. மூதூர் வங்கிக் கிளைகுப்பதில் பொறுப்பு உத்தியோகத்தராய் சி. அருள்ராசா கடமையாற்றுகிருர்.

### ஆசிரியர்கள்

மூதூர்ப்பகுதியெங்கும் கடமை புரியும் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் எதிர்வரும் தை மாதம் முதல் தமது சொந்த மாவட்டத்திற்கு இடமாற்றம் கிடைக்குமா என எதிர் பார்த்த வண்ணமே இருக்கிருர்கள். இவர்கள் எல்லோரும் ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளிமாகாணங்களுக்கு அனுப்பப்பட்டு இப்பகுதியில் பல வருடங்கள் கடமையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

இதற்கிடையில் எதிர் வரும் தைமாதம் முதல் அமுலாகவிருக்கும் ஆசிரியர் பொது இடமாற்றத்துக்கான கட்டளைகள் இம் மாதம் 15-ந் திகதியளவில் ஆசிரியர்களுக்குகிட்டும்என நம்பப்படுகிறது.

### மீண்டும் கிளிவெட்டிக்கே முதலிடம்

இவ்வருடம் திருமலை மாவட்ட அதிபரால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக் [illegible] கிளிவெட்டி அரசினர் வித்தியாலயத்துக்கே முதலிடம் கிடைத்துள்ளதாக தெரியவருகிறது. கடந்த வருடம் நடாத்தப்பட்ட சேமிப்புப் போட்டியிலும் கிளிவெட்டிப்பாடசாலைக்கே முதலிடம் கிடைத்தது. அண்மைக்காலமாக கிளிவெட்டி அரசினர் பாடசாலை பல போட்டிகளிலும் கலந்து கொண்டு பல வெகுமதிகளைப் பெற்று பல பாடசாலைகளுக்கு முன்மாதிரிகாட்டி வருவதுகுறிப்பிடத் தக்கது. திருமலை, மூதூர் போன்ற கல்வி வட்டாரத்தில் ஒரு சில பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் இடமாற்றங்களிலிருந்தும் விலகி தொடர்ந்து பல வருடங்களாக ஒரே பாடசாலையில் கடமையாற்றிவருகிருர்களாம். இவர்கள் இவ்விதம் கடமை பார்ப்பது ஓரளவு வசதியான இடங்களாகும். ஆனல் மிகவும் பிற்போக்கான பகுதியில் உள்ள ஆசிரியர்களோ, இப்படியான இடங்களை எட்டிக்கூடப்பார்க்க முடிவதில்லையாம்.

## மூதூர்ச் செய்திகள்

—நமது நிருபர் —

# 'தமிழ் - சிங்கள சமூக ஐக்கியத்துக்கு உழைப்பவர்'

## செனட்டர் நீதிராஜாவுக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்பு

யாழ்ப்பாணம், திங்கள்

'யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்குச்சென்று அங்கு வாழ்பவர்களில் சிலர் தாம் பிறந்த ஊரை மறந்து வாழ்கிருர்கள். ஆனல் திரு. நீதிராஜா அப்படியல்லாது தாம் பிறந்த ஊராகிய யாழ்ப்பாணத்தின் நலனைக் கருத்தில்கொண்டு பல நல்ல ஆக்கபூர்வமான பணிகளைச் செய்து வருகிருர். நமது சமூகத்தின் உயர்வுக்காக உழைத்தவர்களின் வரிசையில் சேர்க்கப்பட வேண்டிய அவர் தமிழ் சிங்கள மக்கள் ஐக்கியத்துக்கு உழைத்து வந்திருக்கிருர்'

கொழும்பு மாநகரசபை உறுப்பினரும் சமாதான நீதவானுமான திரு. த. நீதிராஜா செனட்டராகத் தெரிவுசெய்யப்பட்டதையொட்டி யாழ்ப்பாணப் பொதுமக்கள் சார்பில் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் உரைநிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. ஹன்டிபேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சபாரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

சேர் பொன். இராமநாதன், கொழும்பில் மேயராக இருந்த திரு. ருத்ரா ஆகியோரின் வழியைப்பின்பற்றி திரு. நீதிராஜா உழைத்து வருகின்ருர்.

பொதுநல சேவையில் அவர்காட்டிவரும் ஆர்வமே அவருக்கு மக்கள் மத்தியில் இத்தனை மதிப்பு இருக்கக் காரணமாக இருக்கிறது.

வாலிபர்கள் மத்தியில் இப்போது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டுவருகிறது. யாழ்ப்பாணத்தில் படித்த வாலிபர் பலர் வேலையற்றிருக்கிருர்கள். இப்பிரச்னையைத் தீர்க்க திரு. நீதிராஜா உதவ முன்வரவேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.'

திரு. த. குமாரசாமிப் புலவர் வரவேற்புரை நிகழ்த்தினர். இவ்வைபவத்தில் வேறுபலரும் திரு. நீதிராஜாவின் சேவையைப் பாராட்டிப்பேசினர்.

திரு. நீதிராஜா தமக்களிக்கப்பட்டவரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் கடத்தல் நடப்பதாக பார்லிமெண்டிலும் பொதுக்கூட்டங்களிலும் பேசப்படுவது வருத்தமளிப்பதாய் இருக்கிறது என்றும் இப்படியான அவப்பெயருக்கு தமிழ் மக்கள் இடம் கொடுக்கக் கூடாது என்றும் தெரிவித்தார். வடபகுதியில் இரண்டு கைத்தொழில் நிலையங்களை நிறுவுவதற்கு அரசாங்கத்திடம் தாம் முயற்சி செய்யப்போவதாகவும் அவர் உறுதியளித்தார்.

திரு நீதிராஜா வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலிருந்து நகரமண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டபோது வழியில் பலர் மலர் மாலை சூட்டினர். நகரமண்டப வாசலில் முன்னைநாள் யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா அவருக்குமாலைசூட்டி வரவேற்ருர். [ந நி.]

உதைபந்தாட்டம்

### இளவாலையில் செென்.பற்றிக்ஸ வென்றது

பண்டத்தரிப்பு, திங்கள்

யாழ்ப்பாணம் செென். பற்றிக்ஸ் 1-ம், 2-ம் பிரிவுகளுக்கும் இளவாலை என்றியரசர் கல்லூரிக் கோஷ்டிகளுக்குமிடையேநடைபெற்ற விறு விறுப்பான ஆட்டத்தில் 2-ம் பிரிவில் செென். பற்றிக்ஸ் வீரர் திறமையாக விளையாடி 4 கோல்கள் போட்டனர். கடைசிநேரத்தில் என்றியரசர் கல்லூரியினர்ஒருகோலைமட்டும்போட்டனர். 4-1 கோல்களால் பற்றிக்ஸ் கல்லூரியினர் வெற்றிபெற்றனர்.

மேற்படி கல்லூரிகளின் 1-ம் பிரிவுக்கான ஆட்டத்தில் ஆரம்ப முதல் முடிவு வரை இரு தரப்பினரும் மோதிக்கொண்டபோதிலும் ஒருவரும் ஒரு கோலும் போடவில்லை. பற்றிக்ஸ் வீரர் கோல் பெறக்கூடிய பல சந்தர்ப்பங்களை என்றியரசர் கோல்காப்பாளரின் திறமையால் இழந்தனர்.

இப்போட்டி என்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் யாழ்.விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்லூரிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றுமாலை 'பி' டிவிஷனில் வண்ணார்பண்ணைவைத்தீஸ்வர வித்தியாலயத்தை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும், 'ஏ' டிவிஷனில் மகாஜனக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரியும் மோதும். [வி.நி.]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மே[illegible] 63-ம் [illegible]லைத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

★ சோவியத் புரட்சி பொன்விழா மலர்

7-11-1967

# 50 ஆண்டில் சோவியத் அரசு

## வறுமை ஒழிந்தது; வாழ்வு மலர்ந்தது

"அக்டோபர் புரட்சிக் கருத்துக்களின் வெற்றியால் மனித குலம் முன்னேறியுள்ளது. மாபெரும் புரட்சிச் சாதனைகளால், உலகின் சமுதாய அரசியல் அடிப்படை மாறியுள்ளது.

கடந்த 50 ஆண்டுக் காலத்தில் சோவியத யூனியன் மாபெரும் தொழிலவளம்மிக்க நாடாக வளர்ந்துள்ளது. சோவியத் தொழில் துறையானது மிகச் சிக்கலான விஞ்ஞான, தொழில் நுட்ப, பொருளாதாரப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் வலிமை பெற்று இடையருது வளர்ந்து வருகிறது. சோவியத் நாட்டில் லெனினியத் திட்டப்படி கூட்டுப் பண்ணை முறை நிறுவப் பட்டுள்ளது. பரந்த அளவில் சோஷலிஷ விவசாய உற்பத்தி நடைபெறுகிறது. இன்றைய வாழ்க்கைத்தரம் மிக உயர்ந்துள்ளது.

சோவியத் யூனியன் கல்வி இலவசம். உழைப்பாளிகளுக்குப் பென்ஷன் உண்டு. வேலை இல்லாத் திண்டாட்டம் இல்லை. வறுமை ஒழிக்கப்பட்டு விட்டது. ஒவ்வொரு சோவியத் குடிமகனும் எதிர்காலத்தில் நம்பிக்கையோடு இருக்கிறன்.

சோவியத் யூனியனில் கலாசாரப் புரட்சி நிறைவேறி விட்டது. அதாவது சோஷலிஸத்தின் பயனுக அனைவரும் கல்வியில் சிறந்தவர்களாக விளங்குகின்ற றனர்.

சோவியத் மக்களிடையே இணையிலாச் சமத்துவத்தை உருவாக்கியது சோஷலிஸத்தின் மாபெரும் சாதனைகளில் ஒன்ருகும். நெடுங்காலம் நிலவிவந்த தேசிய இனப் பிரச்னை, வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டு விட்டது. அனைத்து சோவியத் மக்களும் சுதந்திரம், சமத்துவம் என்ற அடிப்படையில் ஒரேகுலத்தினராக வாழ்ந்து வருகின்றனர்.

சோவியத் மக்களிடையே மாபெரும் மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. புதிய தலைமுறையினர் மிகச் சிறந்த அரசியல் உணர்வு பெற்றுள்ளனர். தோழமையுடனும், கூட்டுணர்வுடனும் உழைக்கின்றனர். அவர்களது செயல்களில் தேசியமும், சர்வதேசியமும் மிளிர்கின்றன.

சோவியத் மக்கள் மிக எளிதில் முன்னேறிவிடவில்லை. மிகக் கடுமையான வர்க்கப் போராட்டத்திற்கிடையிலும், சோவியத் யூனியனைச் சுற்றியுள்ள முதலாளித்துவ உலகின் அக்கினிப் பரீட்சைகளுக் கிடையிலும் அவர்கள் மகத்தான முன்னேற்றம் கண்டுள்ளனர். சோவியத் ஜனநாயகம், உண்மையான மக்கள் ஜனநாயகமாக மலர்ந்து மணம் வீசுகிறது.

சோவியத் யூனியன் 50 ஆண்டுகளில் மாபெரும் முன்னேற்றம் அடைந்திருப்பினும் எல்லாத்துறைகளிலும் வெற்றி பெற்றுவிட்டதாகப் பெருமைபேசவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

## மகோன்னதமான ஐம்பதாவது ஆண்டுவிழா

### சோவியத் ஸ்தானிகர் செய்தி

எங்கள் நாட்டில் தொழிலாளர், விவசாயிகள் ராஜ்யத்தை தோற்றுவித்த மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி வெற்றியீட்டியதன் 50 ஆண்டுகள் நிறைவுபெறும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டுவிழாவை உலகம் பூராவிலுமுள்ள முற்போக்கு மனித வர்க்கத்துடன் சேர்ந்து சோவியத் மக்கள் இன்று கொண்டாடிக் கொண்டிருக்கிருர்கள்.

மாபெரும் லெனினின் தலைமையில் ருஷ்யாவில் சாதிக்கப்பட்ட சோஷலிஸப் புரட்சி பிரமாண்டமான முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.



எல். ஏ. கொரபின்

கம்யூனிஸ சமுதாயத்தை உருவாக்குவதை இறுதி இலட்சியமாகக் கொண்ட சோஷலிஸப் பாதையில் எங்கள் நாட்டை அது வளர்ச்சியுறச் செய்வதுடன் உலக வரலாற்றின் வளர்ச்சிப் போக்கையும், சர்வதேசிய உறவுகளின் போக்கையும் அது பெரிதும் நிர்ணயித்தது.

சோஷலிஸ அமைப்பின் பிரமாண்டமான அனுகூலத்தின் உதவியுடன் சோவியத் மக்கள் யடந்த 50 ஆண்டுகளில் காரிஸத்தின் கிழ் மிகமிகப் பின்தங்கிய விவசாய நாடாக இருந்த ருஷ்யாவை முதல்தர விஞ்ஞானத்தையும் தொழில நுட்பவியலையும் மிக உயர்ந்த கலாச்சாரத்தையும் கொண்ட வளர்ச்சியுற்ற தொழில்வள நாடாக்கியதுடன், பிரமாண்டமான வல்லரசுமாக்கினுர்கள். தொழிலுற்பத்தி மட்டத்தைக் கொண்டு மதிப்பீடு செய்யும்போது சோவியத் யூனியன் இன்று உலகில் இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. புரட்சிக்கு முந்திய காலத்துடன் ஒப்பிடும் போது சோவியத் யூனியனின் தொழிலுற்பத்தி 66 மடங்காக அதிகரித்தது. சோவியத் யூனியன் பூ

[4-ம் பக்கம் பார்க்க]



சோவியத் புரட்சியின் சிற்பியும் சோஷலிஸ சமுதாய அமைப்பின் பிதாவுமான லெனினை வழித்து நினைவில் வைத்துள்ளனர் சோவியத்மக்கள்.

## ★ சோவியத் புரட்சியும் ★ தேசிய விடுதலை இயக்கங்களும்

1917-ம் ஆண்டு நவம்பர் 7-ந் திகதி ரஷ்ய நாட்டில் ஏற்பட்ட புரட்சி உலக சரித்திரத்திலேயே ஒரு முக்கிய சம்பவம் என்பதை இன்றையதினம்அந்தநாட்டு மக்களோ அல்லது சோஷலிஸத்தை விரும்பும் ஏனைய நாட்டிலுள்ளோர் மாத்திர மல்ல சோஷலிஸத்தை எதிர்ப்பவர்களுமே இன்று ஏற்றுக்கொள்ளுகின்றுர்கள் இதற்குக் காரணம் அந்நாட்டில் இந்தப் புரட்சியால் ஏற்பட்ட பொருளாதார சமூக மாற்றங்கள் அந்நாட்டை மாத்திரமல்ல, உலகத்தின் பலபாகங்களைப் பாதித்து வந்து கொண்டிருக்கின்றது. 1917-ம் ஆண்டு உலகம் இருந்த நிலைபரத்தையும் இன்றைய தினம் உலகம் இருக்கும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உண்மையை நன்கு உணர முடியும். 1917-ம் ஆண்டில் உலகத்திலுள்ள முக்காற் பங்கு மக்கள் சுதந்திரமற்ற அடிமை நாடுகளிலேயே வசித்துவந்தனர். முழு ஆசியாக் கண்டத்திலும் ஜப்பான் தேசத்தைத்தவிர ஏனைய நாடுகளிலெல்லாம் அடிமைப்பட்ட நாடுகளாகவே விளங்கிவந்தன. ஆபிரிக்காக்கண்டமும் அடிமைப்பட்ட தேசமாகவே இருந்து வந்தது. கிழக்கு ஐரோப்பாவிலும் தென்னமெரிக்காவிலுமுள்ள நாடுகளிலே அந்தந்த நாடுகளில் அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் இருந்தபோதிலும் எந்த நாடுகளுமே உண்மையான சுதந்திரத்தை அனுபவித்து வரவில்லை. சுருக்கமாகச் சொல்வதென்ருல் மேற்கைரோப்பாவிலுள்ள ஒரு சில நாடுகளும் வட அமெரிக்காவும் மாத்திரந்தான் உண்மையான சுதந்திர நாடுகளாக இயங்கிவந்தன. அந்தக் காலத்திலே இந்த நாடுகள் ஒவ்வொன்றையும் அடக்கியாண்டு வந்த ஏகாதிபத்திய நாடுகள் கூறிவந்ததென்ன வென்ருல், இந்த அடிமை நாட்டு மக்களால் தங்களையே தாங்கள் ஆண்டு கொள்ளக்கூடிய வல்லமையோ ஆற்றலோ பயிற்சியோ இவர்களுக்கு இல்லை. ஆனபடியால் இவர்களது நன்மையைக் கருதியே நாங்கள் இவர்களை ஆட்சிசெய்து வருகிருேம் எனக் கூறிவந்தார்கள். இப்படிப்பட்ட எண்ணங்களை அந்தக் காலத்து ஏகாதிபத்திய வாதிகள் மிக தீவிரமாகப் பிரசாரஞ் செய்து வந்தார்கள். இன்றைக்கும் இப்பிரசாரத்தைச் செய்பவர்கள் முற்று முழுதாக இல்லாமற் போகவில்லை. ஆனல் இப்பிரசாரம் உண்மைக்கு முழுதிலும் முரணனது.



கட்டுரையாளர்

ஐ. ஆர். அரியரத்தினம்

ஆசிய-ஆபிரிக்கக் கண்டங்களிலே ஏகாதிபத்தியவாதிகள் காலமிதித்த நாட தொடங்கி இவர்களுக்கெதிராக மக்கள் கிளர்ச்சிசெய்து வந்திருக்கின்ருர்கள். உண்மைதான். ஏகாதிபத்தியத் தோடு ஒத்துழைப்பதால்

[4-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோவியத் கிராமிய நாட்டிய நாடக நிகழ்ச்சிகளில் ஒன்று

# ஒக்டோபர் புரட்சியும்

1917 இல் நிகழ்ந்த மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சியானது மனித குல வரலாற்றில் தீவிர மாற்றங்களை ஏற்படுத்தியது. அவனி எங்கணும் தேச விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக விளங்கியது. எனவே தான் சோவியத் மக்களுடன் அனைத்து நாடுகளிலுமுள்ள கோடானுகோடி மக்களும் சோவியத் அரசின் 50 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிருர்கள். மாபெரும் அக்டோபர் புரட்சியின் பொன்விழாவைக் கொண்டாடுவதற்குப் பற்யரும், சோவியத் மக்களுடன் இணைந்து நின்று, அக்டோபர் புரட்சியின் நலன்களைப் பாதுகாக்கப் போராடினர். ''சோவியத் ரஷ்யாவின் மீது கை வைக்காதே'' என்ற கோஷத்தின் கீழ், உலகப் பாட்டாளி வர்க்கம் ஒன்று திரண்டது: மாகடலெனப் பொங்கி எழுந்தது. போர்வீரர்கள் ரஷ்யாவிற்கு எதிராகப் போராட மறுத்தனர். நயவஞ்சகமுறையில் ரஷ்யாவுக்குக் கொண்டு வரப்பட்ட படையினர் சோவியத் அரசுடன் சேர்ந்து கொண்டனர். ஏகாதிபத்திய வாதி

**ஏ. திஜாசகோவ்**

பல ஆசிய, ஆபிரிக்க, லத்தீன், அமெரிக்க நாடுகளில் தேசியத் தயாரிப்புக் கமிட்டிகள் நிறுவப்பட்டுள்ளன: அவை செயலாற்றவும் துவங்கியுள்ளன.

உலகைப் பிணித்திருந்த ஏகாதிபத்தியத் தளைகளை அக்டோபர் புரட்சி உடைத்தெறிந்தது, அதன் அரசியல், பொருளாதார, ராணுவச் செல்வாக்கைப் பலவீனப் படுத்தியுள்ளது. அந்நிய ஒடுக்குமுறையாளருக்கு எதிரான போராட்டத்தில் வெற்றிபெற முடியும் என்பதற்கான உண்மை வாய்ப்களுக்கு எதிராகத் துப்பாக்கியை நீட்டினர். பிரிட்டிஷ் அமெரிக்க, ஜப்பானிய, துறைமுகங்களில், தலையீட்டாளருக்கு வேண்டிய ஆயுதங்களைத் துறைமுகத் தொழிலாளர்கள் ஏற்ற மறுத்தனர். ''ரஷ்யாவின் மீது கை வைக்காதே!'' என்ற இயக்கத்தில் ஆசிய ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கக் கண்டங்களின் காலனி நாடுகளும், சார்பு நாடுகளும் கலந்து கொண்டன.

சோவியத் மக்களாகிய நாங்கள் இவ்வியக்கத்தை மிக்க நன்றியுடன் நினைந்து

# விடுதலை இயக்கமும்

புகளை அது நல்கியுளது. மானிட வரலாற்றில் சமுதாய, தேசியப் பிரச்னைகளுக்குத் தீர்வுகண்ட வெற்றிகரமான முதல் புரட்சி, அக்டோபர் புரட்சியே! வெற்றிகரமான முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியும் காலனி எதிர்ப்புப் புரட்சியும் அதுவே!

### முக்கிய பாத்திரம்

சோஷலிஸப் புரட்சியில் தான் சோவியத் மக்களின் ஒருமைப்பாடு தோன்றியது; உருக்குப் போன்ற ஒருமைப்பாடு வலுப்பெற்றது. இந்த ஒற்றுமையானது இளம் சோவியத் குடியரசைப் பாதுகாப்பதில் முக்கிய பாத்திரம் வகித்தது. சோவியத் குடியரசு தோன்றியபோது, 14 ஏகாதிபத்திய நாடுகளும், எதிர்ப்புரட்சி சக்திகளும் அதை அழிக்க முனைந்தன; அவ்வமயம் சோவியத் பாட்டாளிகளும், தேசிய இனங்களும் மட்டுமன்றி, ஹங்கேரியரும், போலந்துக்காரரும். செர்பியரும், ஸெக்குகளும், ஸ்லோவக்குகளும், ஜெர்மானியரும், பின்லாந்துக்காரரும், சீனரும், கொரிமகிழ்கிறோம். சோவியத் யூனியன் தோன்றிய நாள் முதல், சர்வதேசியத்தையும் அனைத்து நாடுகளுடன் சகோதரத்துவ ஒருமைப்பாட்டையும் தனது அயல் துறைக் கொள்கையின் முக்கிய கோட்பாடாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. சோவியத் யூனியன் தனது வரலாறு முழுவதும் இக்கோட்பாட்டை நெறிதவருது பின்பற்றியுள்ளது; ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், சுதந்திரம் சமூக முன்னேற்றம், ஆகியவற்றுக்கு ஆதரவாகவும் போராடுகின்ற மக்களுக்கு அனைத்து உதவிகளையும் அளித்து வருகிறது.

சோவியத் அரசின் மூலவரான லெனினின் மணிமொழிகளை நினைவுகூர்ந்துமங்கோலியர்களுடனும், பெர்சியர்களுடனும், இந்தியர்களுடனும், எகிப்தியர்களுடனும் சோவியத் மக்கள் அனைத்து வழிகளிலும் நல்லுறவை வளர்த்து வருகிருர்கள். சோஷலிஸ அரசை நிர்மாணிக்கும் சோவியத் மக்கள், தமது சர்வதேசக் கடமையை மறந்து

# பொன்விழா ஆண்... விவசா...

சோவியத் கிராமப்புறங்களில் நிகழ்ந்துள்ள சமுதாயப் புரட்சி என்ன? அதன் முக்கிய சாதனைகள் யாவை?

அக்டோபர் புரட்சியின் வெற்றியானது சோவியத் விவசாயிகளின் வாழ்வில் புதிய யுகத்தைத் தோற்றுவித்துள்ளது. சோவியத் ஆட்சி கிராமப்புறத்தில் நிலப்பிரபுத்துவ உறவுகளை அடியோடு நீக்கி, பாடுபடும் விவசாயிகளுக்கு நிலம் அளித்துள்ளது. தனிநபர்களுக்குச் சொந்தமான, சிறிய, பின்தங்கிய துண்டு நிலங்கள் இப்பொழுதுஇயந்திரமயமாக்கப்பட்டபெரும் கூட்டுப் பண்ணைகளாகவும் அரசாங்கப் பண்ணைகளாகவும் காட்சி அளிக்கின்றன.

இப்புதிய பண்ணைகளில் ஆற்றல்மிக்க இயந்திரக் கருவிகளும், நவீன விஞ்ஞான, பொறிஇயல் கண்டுபிடிப்புகளும் பயன்படுத்தப் படுகின்றன. சோவியத் விவசாயமானது உற்பத்திச் சாதனங்களின் பொது உடமையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதில் மனிதனை மனிதன் சுரண்டுவதோ, அராஜகமோ கிடையாது; அது திட்டமிட்ட முறையில் உற்பத்தி செய்கிறது.

அக்டோபர் புரட்சிக்கு முன்பு, 75 சதவிகித மக்கள் விவசாயிகளாக இருந்தனர். 1913-ம் ஆண்டுக்கும் 1965-ம் ஆண்டுக்கும் இடையே மொத்த விவசாய உற்பத்தி 2.5 மடங்கு அதிகரித்துள்ளது. விவசாயிகள் விகிதாசாரம் பாதிக்கும் குறைந்துவிட்டது.

### உயர்ந்த இயந்திரங்கள்

சோவியத் கூட்டுப்பண்ணைகளிலும், அரசாங்க பண்ணைகளிலும் அளவிலும், தரத்திலும் சிறந்த இயந்திரங்கள் இடையருது பயன்படுத்தப் படுகின்றன. 1966-ம் ஆண்டின்இறுதிக்குள் 16,60,000 டிராக்டர்களும், 531,000 தானிய அறுவடை இயந்திரங்களும் சோவியத் விவசாயத்திற்குத் துணைபுரிந்தன. புரட்சிக்கு முன்பு இருந்ததைவிட, இயந்திரசக்தி 10 மடங்கு அதிகமாகும் இவ்வாண்டின் முதல் 6 மாதங்களில் 139,000 டிராக்டர்களும், 43,000 லாரிகளும், 43,000 தானிய அறுவடை இயந்திரங்களும் இதர இயந்திரங்களும் சோவியத் விவசாயத்தில் ஈடுபடுத்தப்பட்டன. இதே காலகட்டத்தில் 1 கோடியே 70 இலட்சம் டன் செயற்கை உரம் பயன்படுத்தப் பட்டது. இது சென்ற ஆண்டின் முதல் ஆறு மாதங்களை விட 23 இலட்சம் டன் அதிகமாகும். இதுதவிர, நில அபிவிருத்தியும் விரிந்த அளவில் நடைபெறுகிறது.

நாஜி ஜெர்மனிக்கு எதிரான போரில், சோவியத் பண்ணைகள் பெருமளவில் அழிந்தன. ஆனல் விவசாயிகள் தன்னலமின்றி உழைத்து, போரிலே அழிந்த பண்ணைகளைத் திரும்பக் கட்டினர் 1950-ம் ஆண்டில் மொத்த விளைச்சலானது போருக்கு முந்திய அளவை எட்டிவிட்டது. அதற்குப் பிந்திய ஆண்டுகளில், கூட்டுப் பண்ணைகளுக்கு வழங்கப்பட்ட நிதியும், இயந்திரங்களும் குறைவாக இருந்ததால் விளைச்சல் சிறிது குறைந்தது.


இதுபோன்ற குறைகளை நீக்குவதற்குக் கம்யூனிஸ்ட் கட்சியும், சோவியத் அரசும் பற்பல பொருளாதார, அரசியல் நடவடிக்கைகளை எடுத்தன. இவற்றின் விளைவாக 1966-ல் தேசிய தானிய உற்பத்தி 171,200,000 டன் ஆயிற்று. அதாவது 1940-ம் ஆண்டைவிட, 1.8 மடங்கு அதிகரித்தது; 1966-ல் இறைச்சி உற்பத்தி 10,800,000 டன். அதாவது 1940-ம் ஆண்டைவிட 2.3 மடங்கு அதிகம். 1966-ல் வெண்ணெய் உற்பத்தி 1,200,000 டன் அதாவது 1940-ம் ஆண்டைவிட 3.1 மடங்கு அதிகம்.

கூட்டுப் பண்ணைகளிலும், அரசாங்கப் பண்ணைகளிலும் உற்பத்தி பெருகியதால் சோவியத் விவசாயிகளின் வாழ்க்கைத் தரமும், கலாசாரத் தரமும் படிப்படியாக உயர்ந்தன. 1913-ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 1966-ல் ஒவ்வொரு சோவியத் விவசாயியின் வருமானமும் 8.5 மடங்கு உயர்ந்துள்ளது. ஆலைத் தொழிலாளியின் பணிக்கும், விவசாயத் தொழிலாளியின் பணிக்கும் இடையேயுள்ள வேற்றுமை குறைந்து வருகிறது. விவசாயிகளின் பொதுவான கல்வித்தரமும் கலாசாரத் தரமும் உயர்ந்து வருகின்றன. நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையேயுள்ள வேற்றுமை படிப்படியாக நீங்கிவருகிறது.

இவ்வாண்டி... தின் எல்லாத் ... சோவியத் உழவர்... முயற்சியுடன் உ... கின்றனர். சோவி... ளுக்கு அதிக

**நிக்கோலா...**
**அனிசிமோ...**

சோவியத் தொழி... க்கு மிகுந்த ... பொருள்களும் அ... காக அவர்கள் அ... றிப் பாடுபடுகின்ற...



கிரெம்ளினில் இப்படித்தான் புரட்சிதினக் ... காட்சிகள் இடம்...

# 50 ஆண்டுகளில் சோ...

சோவியத் ஆட்சி மலர்ந்து அரை நூற்றுண்டு காலம் ஆகும் தறுவாயில் எங்கள் நாட்டில், விஞ்ஞானத்தையும், தொழில் நுட்பத்தையும் வளர்க்க எடுக்கப்பட்ட ஆரம்ப முயற்சிகளைச் சற்று நினைவு கூருதல் பொருத்தமாக விருக்கும். உள்நாட்டு யுத்தம் காரணமாக, நாடெங்கிலும் பொருளாதாரம் சிர்குலைந்து நின்ற போதிலும், உடனடியாக ஆராய்ச்சிக் கூடங்களை நிர்மாணித்து, விஞ்ஞானிகளுக்குத் தேவையான வசதிகளை அளிக்க சோவியத் அரசு தயங்கவில்லை.

இது குறித்துச் சிலர் வியப்படையக் கூடும். எனினும், விஞ்ஞான அடிப்படையைக் கொண்ட மார்க்சீஸம் - லெனினிஸம், வருங்கால சோவியத் விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கான பாதை அதில் தான் அடங்கியுள்ளது என்று முன்கூட்டியே சிந்தித்ததில் வியப்பில்லை.

அன்றிருந்த விஞ்ஞான வளர்ச்சி மட்டத்தையும் இன்றிருக்கும் நிலையையும் ஒப்பிடுவது மலையையும் மடுவையும் ஒப்பிடுவதற்குச் சமமாகும். எனினும் லெனினது வழிகாட்டுதலின் கீழ் அன்று முன்னேடியாகப் பணியாற்றிய - மிகமிகக் கஷ்டமான சூழ்நிலைகளிலும் முழு உறுதியுடன் பணியாற்றிய விஞ்ஞானிகளை நாங்கள் என்றும் பாராட்டக் கடமைப் பட்டவர்களாவோம். சமூக முன்னேற்றத்திற்கு என்றுமிலா அளவிற்கு மிக முக்கியமான அம்சம் விஞ்ஞானமே என்று இன்று அனைவராலும் அங்கீகரிக்கப் படுகிறது. அதிலும் குறிப்பாக விஞ்ஞான அடிப்படையில் அமைந்துள்ள சோஷலிஸ நாட்டிற்கு அது மிகவும் பொருந்தும்.

### எல்லையற்ற சாத்தியப்பாடுகள்

எல்லையற்ற, வரம்பற்ற சாத்தியப்பாடுகளின் திறவுகோல் விஞ்ஞானம். ஒரு நொடிப்பொழுதில் லட்சோப லட்சம் கணிதவியல் சாம்யங்களை விடுவிக்கும் மின்னணுக் கணிதமானிகள் பொருளாதார, நிர்வாகப் பிரச்னைகளை விடுவிக்கப் பயன்படுத்தப் படுகின்றன. திட்டமிட்ட பொருளாதார அமைப்பு இருப்பதனுலேயே இந்த மின்னணுக்கருவிகளை நிர்வாக அமைப்பில் பிரயோகிப்பது சோஷலிஸ நாடுகளில் சாத்தியமாகிறது. எனினும், இந்த மின்னணுக் கருவிகளின் பிரம்மாண்டமான ஆற்றலையும் திறனையும் நாம் இன்னும் சரிவர உணர்ந்து கொள்ளவில்லை என்றே நான் கருதுகிறேன். விஞ்ஞான தொழில் நுட்பவியலில் கணிதமானிகள் புகுந்தது, நவீன தொழில் நுட்ப முன்னேற்றத்தில் வியத்தகு விளைவுகளைத் தரவல்ல புதியதொரு சகாப்தத்தின் தொடக்கம் என்றே கூறலாம்.

அளப்பரிய முன்னேற்ற மடைத்துகொண்டு வரும் மற்ருெரு துறை பௌதீகம். அணு ஆராய்ச்சியின் விளைவாக அணுசக்தி... துறை பெருமள... யடைந்துள்ளது. ... யில் சோவியத் ... களின் பங்கும் ... தக்கதாகும். பொ... அமைப்பை ஆரா... ஞானிகள், டஜ... கான மூலாதார... ளைக் கண்டு பிடி... என்பதோடு ... பிட்ட நிலைமைக... பரஸ்பரம் இடம... யும் தன்மையை... றிருப்பதைக் ... துள்ளனர். நு... காணப்படும் ப... ளையும் மிகப்பெ... பிடிப்புக்களான ... நிலைத் தத்துவம்... டம் மெகானிக்ஸ்... யும் கூட விள...

உ... தொழு...

வில்லை என்பதை... அறிகிறோம். ஒரு... வளர்ச்சிக் கட்ட... தீகம் இருப்பத... விஞ்ஞானிகளும் ... னர்.

பௌதீகமும், ... மும் பல்வேறு பு... ள்களை உற்பத்... அவற்றை உப... வருகின்றன. உருக்கைக் காட்... குறைய 10 மட... வுள்ள விசேஷ... கண்டு பிடிக்கப்... உஷ்ணத்தை கட... மையையும், அ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆண்டில் சோவியத் விவசாயம்

இவ்வாண்டில் விவசாயத்தின் எல்லாத் துறைகளிலும் சோவியத் உழவர்கள் விடா முயற்சியுடன் உழைத்துவருகின்றனர். சோவியத் மக்களுக்கு அதிக உணவும்,

**நிக்கோலாய் அனிசிமோவ்**

சோவியத் தொழில் துறைக்கு மிகுந்த கச்சாப் பொருள்களும் அளிப்பதற்காக அவர்கள் அலுப்பு இன்றிப் பாடுபடுகின்றனர்.


வசந்தகால விதைப்பு மிக நன்ருக நடந்தது. கோதுமை, சோழம், பருத்தி, சூரியவிதை, சணல் ஆகியவற்றை விதைப்பதற்காக குறியீடுகள் நிறைவேற்றப்பட்டன. சில சமயம் குறியீட்டுக்கதிகமாகவே நிறைவேற்றப்பட்டன. இப்போது தெற்குப் பிராந்தியங்களில் அறுவடை நடைபெறுகிறது. மத்திய, கிழக்குப் பகுதிகளிலும் அறுவடை துவங்கிவிட்டது. வசந்த காலத்தில் மோசமானபருவநிலை இருப்பினும், கூட்டுப் பண்ணைகளும், அரசாங்கப் பண்ணைகளும் வயல்களை நன்ருக உழுதன. மிகச் சீக்கிரமாக விதைத்து விட்டன. களைகளை ஒழிப்பதற்கு விவசாயிகள் ரசாயன மருந்துகளைப்பயன்ப[illegible] அவற்றை விமானமூலம் தெளித்தனர்.

**நல்ல விளைச்சல்**


உக்ரேன், குபான், மத்திய கரிசல் பிரதேசம் ஆகியவற்றில் நல்ல விளைச்சல் கண்டுள்ளது. சைபீரியாவிலும், காஸக்ஸ்தானிலுமுள்ள சில பிரதேசங்களில் நல்ல மகசூல் கிடைத்துள்துள்ளது. சோவியத் அரசு, கம்யூனிஸ்டுக் கட்சி, மக்கள் ஆகியோரின் முயற்சியால், கீழைப்பகுதியில் ஏராளமான நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அங்கிருந்து மலிவான, உயர் தரமான தானியம்கிடைத்து வருகிறது.

இன்று சோவியத் கூட்டுப் பண்ணை விவசாயிகள், அரசாங்கப் பண்ணை விவசாயிகள் ஆகியோரின் தரம் உயர்ந்துள்ளது. அவர்களுக்குப் பென்ஷனும், நன்கொடையும், மாணவர் உதவித் தொகையும், இலவச மருத்துவ உதவியும், ஆரோக்கிய விடுதிகளில் ஓய்வும், இலவசக் கல்வியும், இன்னபிற வசதிகளும் கிடைக்கின்றன.

சோவியத் விவசாயிகளின் தன்னலமற்ற உழைப்பால் சோவியத் விவசாய உற்பத்தி இடையருது வளர்ந்து வருகிறது. எனவே, சோவியத் பொருளாதாரத்தின் வலிமையும் பெருகி வருகிறது



சோவியத் யூனியனில் உள்ள ஆலைகளில் காணப்படும் இயந்திரங்களில் ஒன்று இது.



...ன் புரட்சிதினக் கொண்டாட்டங்களில் அணிவகுப்புக் ... காட்சிகள் இடம்பெறும்.

## சோவியத் யூனியனில்

# அயல் நாட்டு நிபுணர்களுக்குப் பயிற்சி

**வி. யெல்யூதின்**

[விசேட செகண்டரி கல்வி அமைச்சர்]

விரிந்த அளவில் மக்களிடையே கல்வியைப்பரப்ப வேண்டும் என்ற நோக்குடன் சோவியத் அரசு புதிய, முற்போக்கான, ஜனநாயகக்கல்வி முறையை வகுத்துள்ளது. இது சோவியத் நாட்டின் தேசியப் பொருளாதாரத் துறைக்கும், கலாசாரத் துறைக்கும் தேவையான நிபுணர் தொகையை நிறைவு செய்ய உதவுகிறது. [இன்று சோவியத் தேசியப் பொருளாதாரத் துறையில் உயர்கல்வி பயின்ற நிபுணர்கள் 1 கோடியே 30 இலட்சம் பேர் உளர்.] ஆண்டு தோறும் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் சோவியத் உயர்கல்வி நிலையங்களில் பட்டம் பெறுகின்றனர். இவ்வாண்டு சுமார் 5 இலட்சம் மாணவமாணவியர் பட்டம் பெறுவர்; 9 இலட்சம் இளைஞர்கள் உயர் கல்வி நிலையங்களில் சேருவர். இன்று சோவியத் யூனியனில் 767 பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் உள்ளன. அவற்றில் 41,23,000 மாணவர்கள் பயில்கின்றனர். மேலும் 40 இலட்சம் இளைஞர்கள் 4000 விசேட செகண்டரி பள்ளிகளில் படிக்கின்றனர்.

கல்வித் துறையிலே ஒரு தலைமுறைக்குள் நாங்கள் அடைந்த வெற்றிகளைக் கண்டு பெருமைப்படுகிருேம். எனினும் அவற்றை நாங்களே அநுபவிக்க விரும்பவில்லை. சோஷலிஸ நாடுகளுடனும், காலனியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றுச் சுயமாக முன்னேறும் இளம் நாடுகளுடனும் மனப்பூர்வமாக எமது அநுபவத்தைப் பகிர்ந்து கொள்கிருேம். அவைகளுக்கு உதவுதல் எமது சர்வதேசக் கடமையெனக் கருதுகிருேம். வெளிநாட்டு மாணவர்களுக்குக் கல்விப் பயிற்சியளிக்கத் தயாராக இருப்பதாகச் சோவியத் அரசு 1922-ம் ஆண்டிலேயே கூறியுள்ளது

**வளரும் நாடுகளுக்கான நிபுணர் பயிற்சி**

யுத்த பிற்காலத்தில் சோவியத் யூனியன் வளரும் நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களுக்குப் பயிற்சியளித்துப் பேருதவி புரிந்துள்ளது. சோவியத் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் அயல்நாட்டு இளைஞர்கள் உயர்கல்வி பெறுவதற்கு நாங்கள் மிகுந்த வசதி அளித்துள்ளோம். இப்பொழுது 130 நாடுகளைச்சேர்ந்த அயல்நாட்டு மாணவர்கள் சோவியத் யூனியனிலுள்ள 300 கல்லூரிகளில் பயில்கின்றனர். அவர்களில் 10,600 பேர் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள். இந்நாடுகளிலுள்ள பொதுநல, அரசாங்க நிறுவனங்களின் வேண்டுகோளின்படி சோவியத் அரசாங்கம் பாட்ரிஸ் லுமும்பா பல்கலைக்கழகத்தை 1960-ல் நிறுவியது. இந்தக் குறுகிய காலத்துக்குள் அது 1000 நிபுணர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது. இப்போது 3000 அயல்நாட்டு மாணவர்கள் இங்குபயிலுகின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளாக சோவியத் யூனியனுக்கும் இளம் விடுதலை நாடுகளுக்கும் இடையே கல்வித்துறையில் நெருங்கிய ஒத்துழைப்பு வளர்ந்து வருகிறது. இந்தியா, ஆப்கானிஸ்தானம், பர்மா, கினியா, காஞ, ஈராக், இந்தோனேஷியா, கென்யா, மாலி, மெக்ஸிகோ, எகிப்து, சிரியா, தான்ஸானியா, சிலி முதலிய நாடுகளிலிருந்து 3000-க்கு மேற்பட்ட மாணவர்கள் சோவியத் கல்லூரிகளில் பட்டம் பெற்றுள்ளனர்.

தம் நாடுகளில் நிபுணர் பற்ருக்குறை இருப்பதால், ஆசிய, ஆப்ரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் பெரிதும் இடர்படுகின்றன. ஏனெனில் காலனி ஆதிக்கத்தின்கீழ் ஒடுக்கப்பட்ட மக்களில் ஒருசிலரே உயர்கல்வி பெற முடிந்தது ஆனல் காலனியாதிக்கம் இதிலும் தனது சுயரூபத்தைக் காட்டவே செய்தது. லண்டன், பாரிஸ், பிரஸல்ஸ் ஆகியவற்றிலுள்ள கல்லூரிகள் காலனியாதிக்கத்தை நிலைநாட்டும் வழக்கறிஞர்களையும், நிபுணர்களையும், குமாஸ்தாக்களையுமே உருவாக்கின. அவை சாதாரண மக்களிடமிருந்து பொருளாதார, கலாசார நிபுணர்களை உருவாக்கவில்லை.

**இளம் நாடுகளுக்குத் தேவையான நிபுணர்கள்**

இளம் விடுதலை நாடுகளின் சுயாட்சிக்கு ஊன்றுகோலாகவும் அவற்றின் முக்கிய அரசியல், பொருளாதார சக்தியாகவும் உள்ளூர் நிபுணர்கள் விளங்குகின்றனர் என்று சோவியத் யூனியன் கருதுகிறது. இந்நாடுகளுக்கு எத்தகைய நிபுணர்கள் மிகத் தேவையோ, அதற்கேற்றவாறு சோவியத் யூனியன் பயிற்சி அளிக்கிறது. ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த பெரும்பான்மை மாணவ மாணவியர் தொழில்நுட்பம், விவசாய நுட்பம் ஆகியவற்றிலும் பெளதிகம், ரசாயனம், கணிதம், மருத்துவம் ஆகியவற்றிலும் பயிற்சி பெறுகின்றனர். இப்பொழுது சோவியத் யூனியனில் வளரும் நாடுகளைச் சேர்ந்த 10.600 மாணவர்கள் உயர்கல்வி பெறுகின்றனர். அவர்களில் 8700 பேர் இயற்கை விஞ்ஞானம், பொறி இயல், மருத்துவம், விவசாயம் ஆகியவற்றில் நிபுணர்களாகத் தேர்ச்சி பெறுவர். நான்கில் ஒரு லத்தீன் அமெரிக்க மாணவரும், மூன்றில் ஒரு ஆப்பிரிக்க மாணவரும் டாக்டர் பட்டம் பெறுவர்.

எமது உயர்கல்வி நிலையங்களில் இப்பொழுது பட்டம் பெற்றுள்ள 800 வியட்நாமிய மாணவரையும், 500 அரபு மாணவரையும்வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தமது சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளின் தேசியப் பொருளாதாரம் வளருவதற்குத் தேர்ச்சிபெற்ற நிபுணர்கள் தேவை இத்துறையில் செய்யும் உதவியைத் தனது சகோதரக் கடமைகளில் ஒன்ருகக் கருதுகிறது சோவியத்யூனியன்.

**இலக்கியம்**

1966-ல்700க்குமேற்பட்ட இலக்கிய நூல்கள் பல [illegible]புகளில் 40 கோடிக்கும் [illegible]கமான பிரதிகள் சோவி[illegible] யூனியனில் வெளிய[illegible] பெற்றன.

# ...ல் சோவியத் விஞ்ஞானம்

வாக அணுசக்தித் தொழிற்துறை பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளது. இத்துறையில் சோவியத் விஞ்ஞானிகளின் பங்கும் குறிப்பிடத்தக்கதாகும். பொருள்களின் அமைப்பை ஆராய்ந்த விஞ்ஞானிகள், டஜன் கணக்கான மூலாதாரத் துகள்களைக் கண்டு பிடித்துள்ளனர் என்பதோடு சில குறிப்பிட்ட நிலைமைகளில் அவை பரஸ்பரம் இடமாற்றமடையும் தன்மையையும் பெற்றிருப்பதைக் கண்டறிந்துள்ளனர். நுண்ணுலகில் காணப்படும் பல அம்சங்களையும் மிகப்பெரும் கண்டுபிடிப்புக்களான சார்பு நிலைத் தத்துவம், 'குவாண்டம் மெகானிக்ஸ்' ஆகியவையும் கூட விளங்க முடியவில்லை என்பதையும் நாம் அறிகிருேம். ஒரு இராட்சத வளர்ச்சிக் கட்டத்தில் பெளதீகம் இருப்பதாகப் பல விஞ்ஞானிகளும் கூறுகின்றனர்.

**வி. இ. ரிலின்**

**உதவிப்பிரதம, விஞ்ஞானம் தொழில்நுட்பவியல் குழுத்தலைவர்**

பெளதீகமும், இரசாயனமும் பல்வேறு புதிய பொருள்களை உற்பத்தி செய்து அவற்றை உபயோகித்தும் வருகின்றன. சாதாரண உருக்கைக் காட்டிலும் ஏறக்குறைய 10 மடங்கு வலுவுள்ள விசேஷ உருக்கு கண்டு பிடிக்கப் பட்டுள்ளது உஷ்ணத்தை கடத்தாத் தன்மையையும், அரைக் கடத்தித் தன்மையையும் மிகு கடத்தித் தன்மையையும் கொண்ட பல புதிய பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உதாரணமாக நியோபியம், ஸிர்கோனியம் ஆகிய பொருள்கள் சேர்ந்த உலோகக் கலவை மிகமிக நீண்ட தூர மின்சாரக் கம்பிகளை அமைக்க மிகச் சிறந்ததாகும்.

**இரசாயனத் துறை**

விவசாயத்திற்கு தேவையானபுதியரகஉரப் பொருள்களையும், பூச்சிக்கொல்லிகளையும். இரசாயனம் அளித்து வருகிறது. தவிர உடை போன்ற உபயோகிப்புப் பண்டங்களிலும் புதிய இரசாயனப் பொருள்கள் ஒரு புரட்சியையே உண்டாக்கி வருகின்றன. உயிரியலில் தீராப் பிரச்னையாக இருந்து வந்த 'பாரம்பர்யத் துறை' யில் புதிதாகக் கண்டு பிடிக்கப் படக் கூடிய சில உண்மைகள் நடைமுறையில் பெரும் பலன்களை அளிப்பவையாக இருக்கும். புதியரகத் தாவரங்களையும் பிராணிகளையும் நாம் உற்பத்தி செய்யக் கூடிய சாத்தியப்பாடுகளும் தெரிய வந்துள்ளன.

விண்வெளி ஆய்வில் நாம் அடைந்துள்ள சாதனைகள் இயற்கைச் சக்திகளின்மீது மனிதன் கொண்டுள்ள ஆதிக்க வளர்ச்சியை எடுத்துரைப்பவையாகும். ரேடியோ டெலிவிஷன் செய்திப் போக்குவரத்துக்கும் காலநிலை முன்னறிவிப்புக்கும் விண்வெளிச் சாதனைகள் பேருதவி புரிகின்றன. விண்வெளித்துறையில் முதல் அடி எடுத்து வைக்கப்பட்ட உடனேயே இன்று அதன் விளைவுகள் மனிதனுக்கு எத்துணை பலனளிக்கவிருக்கிறது என்று கூறுதல் எளிதல்ல. எனினும் பெரும் பலனை நாம் எதிர் நோக்கலாம் என்பதில் எவ்வித ஐயப்பாடும் தேவையில்லை.

சோவியத் விஞ்ஞானம் எல்லாத் துறைகளிலும் கடந்த 50 ஆண்டுகளில் வீறுநடை போட்டு வளர்ச்சி கண்டுள்ளது. இன்று நாட்டில் பல்வேறு ஆராய்ச்சித் துறைகளிலும் 700,000 பேர் பங்குகொண்டு வருகின்றனர். ஆராய்ச்சியின் திறனை உயர்த்தவும், ஆராய்ச்சி முடிவுகளைச் சிறந்த முறையில் பிரயோகிக்கவும் ஆன வழி வகைகளை சோவியத் யூனியன் உயர் மட்ட விஞ்ஞானக்குழு ஆராய்ந்து வருகிறது.

விஞ்ஞான தொழில்நுட்பவியல் அரசாங்கக் குழு பிரதானமாக விஞ்ஞான ஆராய்ச்சியைவளர்க்கவும், கண்டுபிடிப்புகளைச் சரிவரப் பயன்படுத்தவும், பிற நாடுகளுடன் விஞ்ஞான தொழில் நுட்பத் தொடர்புகளை விரிவு படுத்தவும் உழைத்து வருகிறது.

அடிப்படை ஆராய்ச்சியைத் திட்டமிடுதல் மிக மிகக் கடினமானது. விஞ்ஞானத்தின் எந்தத் துறையில், எந்தப்பிரிவில் மிகப் பெரும் கண்டுபிடிப்பு ஏற்படப் போகிறது என்பதை முன்கூட்டியே கூறுதல் மிகச் சிரமமானது. ஆகவே தான் இதனைத் திட்டமிடுதல் கடினம் என்று கூறினேன்.

எத்துறையாயினும் சரி விஞ்ஞான ஆராய்ச்சியின் பயன்கள் மனிதகுல முன்னேற்றத்திற்கும் இன்ப வாழ்விற்குமே பயன்பட வேண்டும் [illegible]. சோவியத் விஞ்ஞானிகளின் வேட்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் புரட்சியும் தேசிய விடுதலைஇயக்கமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒவ்வொரு நாட்டிலும் நலம் பெறக்கூடிய ஒரு சிலர் இருந்து வந்திருக்கிறார்கள். இவர்கள்தான் ஏகாதிபத்தியத்தோடு ஒத்துழைத்து ஏகாதிபத்தியத்திற்குச் சார்பான பிரசாரங்களிலும் ஏனைய வேறு நடவடிக்கைகளிலும் இன்றுவரை ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் நூற்றுக்கு ஐந்து சத விகிதமானோராகவும் இருக்கவில்லை. ஏனைய மக்கள் அத்தனை பேர்களும் ஏகாதிபத்திய ஆட்சியை எதிர்த்துக்கொண்டே வந்துள்ளனர். ஆசியாவின் சமீபகால வரலாறு இந்த உண்மைகளை வெளிப்படுத்துகின்றது. 1830-ல் தொடங்கி சீனாவில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான மிகப் பரந்த ஆயுதம் தாங்கிய சுதந்திரப் போராட்டங்கள் பல நடைபெற்றிருக்கின்றன. 18 7ல் இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிராக ராணுவப் போராட்டமும் கிளர்ச்சியும் ஏற்பட்டன. தொடர்ந்தும் ஆசியாவில்உள்ள இருபெரிய நாடுகளிலும் மிகப் பரந்ததேசிய விடுதலை இயக்கங்கள் வளர்ந்து வந்திருக்கின்றன. அதே போல, இந்தோனேஷியா, பர்மா, வியட்நாம், எகிப்து போன்ற நாடுகளிலும் இவ்வித சுதந்திரப் போராட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன. ஆனால் எல்லா அடிமை நாடுகளிலும் இப்படிப்பட்ட விடுதலை இயக்கங்கள் நடந்து வந்த போதிலும் ஒரு நாட்டில் தன்னும் இந்தஇயக்கம் அந்தக்காலத்தில் வெற்றி காணவில்லை. இதற்குக் காரணம் இந்த நாடுகளிலே கைத்தொழில் வளர்ச்சி இருக்கவில்லை. ராணுவப்பயிற்சியும் இருக்கவில்லை. இந்த வாய்ப்புகள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு மாத்திரமே இருந்தபடியினால் இவர்கள் தொடர்ந்தும் இந்த நாடுகளை அடக்கி ஆண்டு வந்தார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் இந்நிலைமையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த யுத்தத்தில் ஜெர்மன், ஜப்பான், இத்தாலி, ஒல்லாந்து, பெல்ஜிய ஏகாதிபத்தியங்கள் இல்லாது அழிந்துவிட்டன. பிரெஞ்சு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் மிகப் பெலவீனப்பட்டுள்ளன. அமெரிக்க ஏகாதிபத்தியம் மாத்திரந்தான் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் பலமிக்க சக்தியாகத் தோன்றியது. ஆனால் இதற்குப் பதிலாக கிழக்கு ஐரோப்பாவிலும் சீனாவிலும் ஏற்பட்ட மாற்றங்களால் உலகத்தில் மிகப் பலம்வாய்ந்த ஒரு சோஷலிஸமுகாம் தோன்றியது. இந்தச் சோஷலிஸ முகாமும் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் விடுதலைப்போராட்டமும் சேர்ந்த சக்தியை ஏகாதிபத்திய வாதிகளால் எதிர்த்து முறியடிக்கும் சக்தி இருக்கவில்லை. ஆனபடியினால்தான்- ஏகாதிபத்தியவாதிகளுக்கு இந்நாடுகளைவிட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சுதந்திரம் பெற்ற நாடுகள் இப்படி தங்கள் சுதந்திரத்தைநிலைநாட்டி பொருளாதாரரீதியில் வளர்வதை ஏகாதிபத்திய நாடுகள் விரும்புவதில்லை. இதைகுழப்புவதற்கு அவர்கள் பல சூழ்ச்சிகளைச்செய்து வருகிறார்கள். சில தருணங்களில் ஆயுதம்தாங்கிய போராட்டம்நடத்துவார்கள். 1956ல் எகிப்து அரசாங்கம் சூயஸைத் தேசியமயமாக்கிய பொழுதுஏகாதிபத்தியவாதிகள் அந்நாட்டுக்கெதிராகப் போர் தொடுத்தார்கள். இந்த வருடமும் இஸ்ரேல் நாட்டைப் பாவிதது இதே சதியை திரும்பவும் செய்தார்கள். ஆனால் இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் சோவியத் யூனியனது பரிபூரண ஆதரவு இருந்தபடியினல் எகிப்து தனது சுதந்திரத்தைப் பாதுகாக்கக்கூடியதாக இருந்தது.

ஆகையால் இன்றைய உலகில் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் பலசுதந்திர நாடுகள் தோன்றிதங்கள் தங்கள் சுதந்திரங்களைப்பாதுகார்த்து பொருளாதாரரீதியாக முன்னேறக்கூடியஒருசூழ்நிலைஏற்பட்டிருக்குமேயாயின் இதற்குமூலஸ்தானமாக இருந்த 1917ம் ஆண்டில்ரஷ்யாவில் ஏற்பட்ச சமூக பொருளாதார மாற்றங்களே. ஆனபடியால்தான் இத்த நாடுகளிலே உள்ள மக்களும் சோவியத் யூனியனில் உள்ள மக்களுடன் சேர்ந்து உலக சரித்திரத்திலே மிகமுக்கியமான ஒரு தினமாகிய இன்றைய தினத்தைக் கொண்டாட முன்வருகிறார்கள்,

## 50 ஆண்டில் சோவியத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நாம் பரிகாரம் காண வேண்டிய எத்தனையோ மாபெரும் பிரசனைகள் உள. "அடையஇயலாது," 'ஒருகாலும் நடவாது என்று கருதப்பட்ட பிரச்னைகளையெல்லாம் திர்த்துவைத்த முதல் சோஷலிஸ நாடு, சோவியத் யூனியனே! இதில்முக்கிய பாத்திரம் வகிப்பது சோவியத் தொழிலாளி வர்க்கம். சோவியத் யூனியனின் பெருமைக்கெல்லாம் அதுவே ஜீவாதார அடிப்படையாகும். சோவியத் தொழிலாளி வர்க்கம் தான் அக்டோபர் புரட்சியைக் கொணர்ந்தது. சோவியத் நாட்டில் சோஷலிஸ சமுதாயத்தைச் சமைத்தது.

சோவியத் தொழிலாளி வர்க்கம்தான், சமுதாயமுன்னேற்றத்துவத்துக்குதலைமை தாங்கும் வர்க்கமாகும். கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டும் முன்னணிப்படையாகும்.

கம்யூனிஸ சமுதாயத்தை நோக்கி முன்னேறி வரும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் அநுபவம், சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சோவியத்கம்யூனிஸ்டுக் கட்சி தனது அநுபவத்தை உலகுக்கு வழங்குவதோடு, சகோதரக் கட்சிகளின் அநுபவத்தையும் பரந்த அளவில் ஏற்றுக்கொள்கிறது.

பரஸ்பர உதவியும், ஆதரவும் அநுபவப் பரிமாற்றமும் எமது வெற்றிகரமான முன்னேற்றத்துக்கு மிகவும் துணைபுரிகின்றன.

சோவியத் யூனியனின் சர்வதேசக் கொள்கை பற்றியும் அது பேசுகிறது. அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து உலக அரசியலில் எதிரும் புதிருமான இருவழிகள் தோன்றின. ஒன்று சுதந்திரத்தையும், சமாதானத்தையும் குறிக்கோளாகக் கொண்ட சோஷலிச வழி.

நாடுகளிடையே சமத்துவம், சுயாட்சி உள் விவகாரங்களில் குறுக்கிடாமை ஆகிய கோட்பாடுகளைச் சோவியத் யூனியன் கடைப்பிடித்து வருகிறது. இத்தகைய அயல் நாட்டுக்கொள்கை, உலக மக்களின் உளமார்ந்த இலட்சியங்களுக்கு ஏற்றதாகும்.

அக்டோபர் புரட்சியின் சர்வதேச முக்கியத்துவம் மிகப் பெரிது.

அகடோபர் சோஷலிஸப் புரட்சி, சோஷலிஸத்துக்காக பாட்டாளி வர்க்கப் போராட்த்தையும் ஏனையபுரட்சிகர சக்திகளின் போராட்டத்தையும் ஒடுக்கப்பட்ட மக்களின் தேச விடுதலைப் போராட்டத்தையும் ஒருங்கிணைத்தது.

அக்டோபர் சோஷலிஸப் புரட்சியானது, உலக மக்களின் உள்ளத்தில் புரட்சிக் கனலைத் தூண்டியது. அனைத்து நாட்டு உழைப்பாளிகளின் உள்ளத்திலும் உரமூட்டியது. ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு விழிப்பூட்டியது. சமுதாயத்தின் விரிந்த பரந்த பகுதிகளுக்கு அரசியல் உத்வேகமூட்டியது. அக்டோபர் புரட்சியானது இன்றைய உலக கம்யூனிஸ இயக்கத்தின் தொட்டிலாகும். சோஷலிஸக் கொள்கை வழியில், புரட்சிகரமான உலகை மாற்றியமைக்கும் போராட்டத்தில் மிக முக்கியமான அரசியல் சக்தியாக விளங்குகிறது, உலக கம்யூனிஸ இயக்கம்.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் முன்னணியில் நிற்கிறது, அக்டோபர் புரட்சியிலே பூத்தெழுந்த சோவியத் யூனியன்.

## மகோன்னதமான...

[1-ம் பக்கத் தொடர்ச்சி[

போது 1000 லட்சம் தொன்கள் உருக்கை உற்பத்தி செய்கிறது. இது ஏறத்தாள ஐக்கிய அமெரிக்காவின் உருக்கு உற்பத்தி அளவுக்குச் சமமாகும். 15 லட்சத்திற்கும் கூடுதலான ராடர்களும் மற்றும் விவசாய யந்திரங்களும் எமது விவசாயத்தில் பாவிக்கப்படுகின்றன. எங்கள் நாட்டின் மொத்த மின்சார உற்பத்திப் புரட்சிக்கு முந்திய காலத்தின் மொதத உற்பத்தியிலும் பார்க்க 267 மடங்கு கூடுதலாகும்.

அக்டோபர் புரட்சியினல் உருவாக்கப்பட்ட சமூக அனுகூலங்களை சோவியத் மக்கள் மாபெரும் அளவில் அனுபவிக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம், படிப்பறிவின்மை. தொற்று வியாதிகள், ஆகியன எமது நாட்டிலிருந்து பூரணமாக ஒழித்தக் கட்டப்பட்டு விட்டன. சகலருக்கும் இலவச வைத்திய பராமரிப்பு அளிக்கப்படுகிறது. தனது வரவு செலவு திட்டத்திலிருந்து சோவியத் ராட்சியம் கல்வி சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு கலாசாரம் ஆகிய துறைகளில் மக்கள் தேவைகளை ந்றைவேற்றுகின்றது. எங்கள் நாட்டில் வேலை நேரமும் வரிகளும் குறைக்கப்பட்டுள்ளன. சம்பளம் அதிகரித்துள்ளது. மககளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எண்ணிறந்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த 10 ஆண்டுகளில எமது நாட்டின் மொத்த ஜனத்தொகையில் ஏறத்தாழ அரைவாசிப் பகுதியினர் புதிய மனைகளில் குடியேறினர். அல்லது குடியிருப்பு வசதிகளை உயர்த்திக் கொண்டனர் என்ற ஒரே உண்மையே போதுமானதாகும்.

மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி காலனி மக்களின் சுதந்திரத்திற்கான விமோசன இயக்கத்திற்கு பிரமாண்டமான உந்துதலை அளித்தது. காலனி நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வழங்குவதுபற்றி ஐ. நா. அங்கீகரித்த பிரகடனத்தை முன்வைத்தது சோவியத் யூனியனே. இந்தப்பிரகடனத்தை விரைவாகவும் முழுமையாகவும் அமுல்படுத்துவதற்காக நாம் அயராதும் தீவிரமாகவும் பாடுபடுகிறோம்.

மாபெரும் லெனினின் ஆக்ஞையின் பிரகாரமும், சோஷலிச அமைப்பின் இயல்புக்கு அமையவும் சோவியத் ராஜ்யம் அதன் ஆரம்ப நாட்கள் முதற்கொண்டே சமாதான. சகஜீவனக் கொள்கையை, வளரும் நாடுகளுடன் தீவிரமான சர்வவியாபகமான ஒத்துழைப்பை [illegible]

[illegible] துள்ளது. இப்போது இலங்கை உட்பட பல ஆசிய, ஆபிரிக்க வளரும் நாடுகளுடன் சோவியத் யூனியன் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பைப் பேணுகிறது. சோவியத் யூனியனின் பொருளாதார தொழில்நுட்ப உதவியுடன் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அல்லது நிர்மாணிக்கப்படும் டயர்தொழிலகம், உருக்கு ஆலை, மாஆலை முதலிய தொழில் வளர்ச்சித் திட்டங்கள் இலங்கையைத் தொழில் மயமாக்கவும், அதன் தேசியப் பொருளாதாரத்தை வளர்க்கவும், தேசிய நிபுணர்களை உருவாக்கவும் பெரிதும் உதவுகின்றன.

சோவியத் மக்கள் இலங்கை மக்கள்பால் மிகுந்த நட்புணர்வு கொண்டுள்ளனர், எம்மிரு நாடுகளுக்கிடையில் நட்புறவுகளை மேலும் வலுப்படுத்த சோவியத் அரசாங்கம் தன்னாலானதனைத்தையும் செய்துள்ளது. கடந்த ஆண்டுகளில் பல நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் சோவியத் யூனியனுக்கு விஜயம் செயதுள்ளனர், இவர்கள்மத்தியில் அமைச்சர்கள், மூதவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற அங்கத்தவர்கள். ராஜயத் தலைவர்கள், அரசியல் வாதிகள். பொது ஜனத் தலைவர்கள், தொழிலக-தே ட்டத் தொழிலாளர். வர்த்தகர்கள், எழுத்தாளர்கள், பௌத்த குருமார்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் இருந்துள்ளனர். இந்த இலங்கைப் பிரஜைகள் சோவியத் மக்களின் அரசியல், பொருளாதார, விஞ்ஞான, கலாசார வாழ்வின் பல்வேறு அம்சங்களைத் தமது கண்களால் நேரடியாகப் பார்த்தனர்.

சோவியத் ராஜ்யத்தின் 50-வது ஆண்டு விழாவின் போது சோவியத்மக்களுக்கு இந்தப் பொன் விழாவில் மேலும் பல புதிய மாபெரும் வெற்றிகளும் சுபீட்சமும் கிட்டுவதாகுக என வாழ்த்துத் தெரிவித்து இலங்கைப்பிரஜைகளிடமிருந்து எண்ணிறந்த வாழ்த்துச் செய்திகள் இலங்கையிலுள்ள சோவியத் ஸ்தானிகராலயத்திற்கு வந்து குவிந்துள்ளன, குவிந்துகொண்டிருக்கின்றன.

இத்தகைய பாராட்டுச் செய்திகளை நமக்கு அனுப்பிய அனைவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த நான் விரும்புகிறேன்.

சோவியத்-இலங்கை மக்களுக்கிடையிலான நட்புறவு வளர்ந்து வலுப்படுவதாகுக.

ஆடவர்களே !

வனிதையர்களே !

உங்கள்

தையல்


தேவைகள் அனைத்திற்கும்

யாழ்ப்பாண

ஐக்கிய வியாபாரச்

சங்கத்திற்கு

விஜயம் செய்யுங்கள்



ரேடியோ

அம்பிளிபயர்

கிரமபோன்

இசைத்தட்டுகள்

இலக்றிக் சாமான்கள்

விற்பனையிலும் திருத்துவதிலும் முதல்தர ஸ்தாபனம்

எஸ். சுலைமான்கண்டு

& பிறதர்

5—7, மொம்சாக் கட்டிடம்

[illegible] வீதி, — போன் : 265 — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org